24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 231 ஆடி 02 ஆம் நாள் வியாழக்கிழமை 18 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# தமிழர்கள் வாழும் மலையகத்திலும் பௌத்த பேரினவாத அடக்குமுறை

## கந்தப்பளை மாடசாமி ஆலயத்தில் பௌத்த கொடியேற்றினார் தேரர்



கொழும்பு, ஜூலை 18

நுவரெலியா, கந்தப்பளை தோட்டப் பகுதியில் உள்ள தெய்வச் சன்னதியில் தேரரால் பௌத்த கொடி ஏற்றப்பட்டமையால் அந்தப் பகுதியில் நேற்றுப் பதற்ற நிலை ஏற்பட்டது.

கந்தப்பளை தோட்டப் பகுதியில் உள்ள மாடசாமி ஆலயத்தில் பொலனறுவைப் பகுதியைச் சேர்ந்த தேரர் ஒருவரினால் பௌத்த கொடி ஏற்றப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் மாத்திரமல்ல தமிழர்கள் வாழும் மலையகப் பகுதிகளிலும் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறை தொடர்கின்றது. 21

## நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நந்திக்கொடிகள் கிழித்து அடாவடி!



முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு - நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் கட்டப்பட்டிருந்த நந்திக்கொடிகள் கிழித்து எறியப்பட்டுள்ளன என்று முள்ளியவளைப் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி குறித்த ஆலயத்தில் 108 பானைகளில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. இதற்காக வீதியில் நந்திக்கொ 21

## திருக்கேதீச்சர ஆலய வளைவு: சனியன்று முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

திருக்கேதீச்சர ஆலய வரவேற்பு வளைவு தொடர்பான முக்கிய கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்ப்பாண பிராந்திய பணிமனையில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. 21

## 5 ரூபாவால் அதிகரித்தது பாண் விலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

450 கிராம் நிறையுடைய பாணின் விலை 5 ருபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்தது.

ஒரு கிலோ கோதுமை மா 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதை அடுத்தே பாணின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## பெரமுனவின் தாளத்துக்கு ஆடமுடியாது

தயாசிறி உடும்புப்பிடி

கொழும்பு, ஜூலை 18

சிறிலங்கா பொது 21

கன்னியா விவகாரம்:

## தூதுக்குழுவை சந்திப்பதற்கு உடன்பட்டார் அரசதலைவர்!

மனோ தகவல்

கொழும்பு, ஜூலை 18

'திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்றில் விகாரை கட்டும்படி தொல்பொருளாராட்சித் திணைக்களத்துக்கு கடிதம் 21

## கன்னியாவில் இடம்பெற்றவை அருவருக்கத்தக்க சம்பவங்கள்

சரவணபவன் எம்.பி. கடும் கண்டனம்



திருகோணமலை, ஜூலை 18

திருகோணமலை கன்னியா பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் அருவருக்கத் தக்கவை. பேரினவாதிகளின் இத்தகைய காட்டுத்தனப் போக்கை அரசு 21

## தூக்குத் தண்டனைக்கு எதிரான மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 18

தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்துவதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒக்டோபர் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தூக்குத் தண்ட 21

கன்னியாவில்

## தமிழர்கள் தாக்கப்பட்டமை மிகவும் கீழ்த்தரமான செயல்

ரெலோ கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் இடித்து அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரி 21

கன்னியா விவகாரம்

## தமிழர்கள் மீதான தாக்குதல்களை எதிர்த்து வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஜூலை 18

கன்னியா வென்னீரூற்று பகுதியில் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்த விகாரை கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

வடக்கு- கிழக்கில் கடத் 21

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

✔ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✔ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443



Entry requirement
HND / any Equal Qualification in the similar study

BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk

**மஹா சக்தியுள்ள**
**வசிய மாந்திரிகம்**

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
- காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
- பெற்றோர் விருப்பமின்மையா?
- கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
- வேலைத்தளத்தில் பிரச்சினையா?
- காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?


(இரகசியம் பேணப்படும்)

- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.
**0778 432 602 / 075 302 4239**
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

# நேரத்தைப் பயன்படுத்துவதால் வாழ்வில் சிறப்பு



நேரம் என்பது கிடைத்தற்கரிய அபூர்வமான ஒரு வாய்ப்பு. அதைச் சரியாகப் பயன்படுத்தி அதி உச்ச பயனைப் பெற்றவர்கள் சிறப்புடனும் புகழுடனும் வாழ்ந்ததைச் சரித்திரங்கள் கூறுகின்றன. இந்த நேரத்தைத் தற்காலத்தில் வீணாகக் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேலையின்றி வெட்டிப் பேச்சில் ஈடுபடும் வழக்கமுள்ளோர் நேரத்தை அழுகும் பொருள் என்று வர்ணித்துள்ளார் ஒரு மேல் நாட்டு அறிஞர். பலரது வாழ்வில் இது திறந்து வைக்கப்பட்ட கற்பூரமாய் எது வித பயனும் இன்றிக் காற்றில் கரைத்து கொண்டிருக்கிறது. மிகவும் விவரமானவன் நான் என்று பெருமை பேசுபவர்கள் கூட நேரத்தைக் கையாள்வதில் சித்தியெய்துவதில்லை.

மனிதரிடத்தில் பொருளாதாரத்திலும் உடல் நலத்திலும் எவ்வளவு பாகுபாடுகள் இருந்தாலும் நேர விடயத்தில் எல்லோருக்கும் 24 மணி நேரத்தை மட்டும் வழங்குகின்றது. ஒரு வினாடி கூட கூடுவதும் இல்லை. குறைவதுமில்லை. ஆனால் இந்த 24 மணித்தியாலத்தையும் மனிதன் எவ்வாறு எந்த வழிகளில் பிரயோசனப்படுத்துகிறான் என்பதிலேயே அவனது மானிட வாழ்க்கையின் சிறப்பியல்புகள் அமைந்து விடுகின்றன.

நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தாமையால் தெருவுக்கு வந்தவர்களும் இருக்கிறார்கள். அதேவேளை தெருவில் நின்றவர்கள் நேரத்தைச் சரியாகப் கையாண்டு வாழ்வில் திருப்பு முனைகளுடாக நன்றாக வாழ்ந்தும் உள்ளனர். சில பேர் எனக்கு நேரமே சரியில்லை என்று சும்மா இருந்துகொண்டு நேரத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றனர். 'ஆத்தர் பாரட்' என்பவர்மனிதர்கள் எதையெல்லாம் எப்படி எல்லாம் வீணடிக்கிறார்கள் என்று கணக்கெடுப்புச் செய்தார். இறுதியாக மிஞ்சிப்போகும் சவர்க்காரத் துண்டை வீசுவதுதான் மனித இயல்பு. இதை ஒரு புதிய சவர்க்காரம் நனைந்த பின்பு அதில் அழுத்தி விட்டால் அந்தத் தேய்ந்த சவர்காரத்துண்டானது பாவனைக்கு உட்படுவதைக் காண முடிகின்றதல்லவா? இப்படியாக அலங்காரப்பொருள்கள் உணவு மனித ஆற்றல் இவற்றை எல்லாம் வீணடித்துக்கொண்டு இருப்பதாகக் க்ண்டுள்ளார். 24மணி நேரத்தில் 60வீத நேரத்தை (கிட்டத் தட்ட 14 மணி நேரம்)வீணடிக்கிறோம் எனக்குறிப்பிட்டுள்ளார். விரயம் செய்யும் ஏனையவற்றைத் திரும்பப் பெற்று விடலாம். ஆனால் நேரத்தை இழந்தால் அந்த அற்புதமான நேரத்தை மீளப் பெற்றுக்கொள்வது என்பது முற்கொம்பா கும்.

போன காலங்கள் போய் விடட்டும். இனிப் புது மனிதர்களாக உணர்வு பூர்வமாகச் சிந்தித்து நேரத்தை ஆட்சி செய்ய முன்வருவோம். இருக்கின்ற நேரத்தைச் சரிவரப் பயன்படுத்தினால் இந்தப் பூவுலகில் இருந்து பெற்றுக்கொள்ள நிறையவே உள்ளன. அன்புள்ளங்களும் நட்பு உள்ளங்களும் தேவைக்கு ஏற்ப வளம்ான செல்வங்களும் எங்களைச் சுற்றி நிறையவே இருக்கையில் இவற்றைப் பெற்று சந்தோசமாகத் திருப்தியாகப் புகழுடன் வாழநேரம் இல்லை என்று சொல்லாது சகல தேவைகளுக்கும் 24 மணித்தியாலயங்களையும் சரியாகப் பயன்படுத்தி வாழப்பழகுவோமாக.

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
செல்வி சுபாசினி செல்வமாணிக்கம்
அவர்களின் மாமியார்
திருமதி
**பிரான்சிஸ் சேவியர் சிறிதேவி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

(ach.391) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 09.01.1931 விண்ணில் 16.07.2019

குரும்பசிட்டி சன்மார்க்கசபையின் வாழ்நாள்
ஆதரவாளரும், நிர்வாக உறுப்பினருமான
**கந்தையா இராமநாதன்**
அவர்கள் காலமான செய்தி அறிந்து மனம்
வருந்துவதோடு அன்னாரின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அவர்தம்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்**

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் பணிபுரியும்
திருமதி ரஞ்சிதா முகுந்தனின் அன்புச்சகோதரர்
**பிள்ளையான் தயாளன்**
அவர்கள் நேற்று முன்தினம் (16.07.2019)
அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச் சங்கம்.**
**அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,**
**கைதடி**

## கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய பிரதி நிலஅளவை
நாயகம் (வட மத்திய மாகாணம்).
உத்தரவு பெற்ற நில அளவையாளர்
சங்க உறுப்பினரும்.
பதிவு பெற்ற நில அளவையாளருமான
**சரவணமுத்து**
**கனகரசன்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**உத்தரவு பெற்ற நில அளவயாளர் சங்கம்.**
**(வட பகுதி)**

(CS 23776) (14.17)

## வர்ணம் தீட்டுவோம்



# மரண அறிவித்தல்



## ஸ்ரீஸ்கந்தராசா ஜெயரூபன்

தோற்றம்
30.01.1992

மறைவு
29.06.2019



அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்தவருமான ஸ்ரீஸ்கந்தராசா ஜெயரூபன் 29.06.2019 அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் ஸ்ரீஸ்கந்தராசா - ஜெயகுமாரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் ஜெயபாஸ்கரன் (பிரான்ஸ்), ஜெகன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (வாயுபுத்திரா போன் சொப், யாழ்ப்பாணம்), ஜெயவாஜினி (யாழ்ப்பாணம்), ஜெசிந்தன் (பிரான்ஸ்), ஜெயவாகீசன் (யாழ் மத்திய கல்லூரி A/L மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கீதாஞ்சலி (பிரான்ஸ்), மதுசாலினி (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் டிருக்சனின் (பிரான்ஸ்) சித்தப்பாவும் காலஞ்சென்றவர்களான மருதையினார் - லட்சுமி, பொன்ராசா - மகேஸ்வரி ஆகியோரின் பேரனும் பரமேஸ்வரி (கனடா), றேனுகாதேவி (கனடா), ராஜேஸ்வரி (கனடா), உதயகுமார் (லண்டன்), சாந்தகுமார் (ஆஸ்திரேலியா), சுகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற பவானந்தன் (ஜேர்மனி) மற்றும் டில்லிகுமாரி (ஓட்டுமடம்), சூரியகுமாரி (லண்டன்), தயாளினி (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| ஜெயபாஸ்கரன் | : | 0033753717790 |
| ஜெகன் | : | 0033758410166 |
| ஜெயசீலன் | : | 077 3644246 |
| ஸ்ரீஸ்கந்தராசா | : | 076 051 7347 |
| | | 077 468 9401 |

# இறைவன் கொடுக்கும் வரம்


கோடீஸ்வர
சீட்டிழுப்பு வாரம்: 469 சீட்டிழுப்பு திகதி: 2019.07.16
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
Z 04 11 16 25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 131,525,118/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 17.07.2019 வெற்றி வாரம் 2562 வர்ணம் பச்சை
மீனம் வெற்றி இலக்கங்கள் 07 20 21 62
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
18.07.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 262
சீட்டிழுப்பு திகதி 17.07.2019 நீலம்
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 33 42 64
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,741,032/=
20.07.2019 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 011 333 5467 www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3210 திகதி: 2019.07.17 புதன்கிழமை ஊதா
09 13 22 26 E 69
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 51,921,925/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 672 வர்ணம்: பச்சை சீட்டிழுப்பு திகதி: 2019.07.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 70,730,765/-
வெற்றி இலக்கங்கள் 12 21 27 58 S



ஒரு தொழிலாளி தனது தேவைகளுக்கு உதவ என்று ஒரு கழுதையை வளர்த்து வந்தார். அந்தக் கழுதை அவனிடம் நன்றியும் விசுவாசமும் உடையதாக இருந்தது. அவன் எவ்வளவு பாரத்தை அதன் முதுகில் சுமத்தினாலும் முக்காமல் முனகாமல் தனக்கிடப்பட்ட பணியைச் செய்வனே செய்து முடித்தது அது.

ஆகவே கழுதையை அவன் மிகவும் நேசித்தான். கழுதையும் அவனும் மிகவும் அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்தனர். கழுதைக்குச் சின்னதாக ஏதாவது சுகவீனம் ஏற்பட்டால் கூட அவனால் தாங்க முடியாது.

ஒருசமயம் கழுதையும் அவனும் ஓர் ஊரை விட்டு மற்றோர் ஊருக்கு நடந்து சென்று கொண்டிருந்தனர். வழியில் மிகப் பெரிய பள்ளம் ஒன்று வெட்டப்பட்டிருந்தது. தொழிலாளி அதனைக் கண்டுகொள்ளவில்லை. அவன் ஏதோ சிந்தனையுடன் நடந்து சென்று கொண்டிருந்தான். திடீரென அந்தப் பள்ளம் அவன் கண்ணில் படவே எச்சரிக்கை அடைந்த அவன் அதைத் தாண்டிக் குதித்தான். கழுதை பின்னால் வந்து கொண்டிருந்தது. அதை அவன் எச்சரிப்பதற்குள் கழுதை தவறிப் போய் அந்தப் பள்ளத்துள் விழுந்து விட்டது.

ஆள் அரவமற்ற அந்த இடத்தில் அந்தக் கழுதையைக் காப்பாற்ற உதவி கிடைக்காமல் முதலாளி தவித்தான். தன்னால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்தான். பள்ளம் ஆழமாக இருந்ததால் கழுதையை அதிலிருந்து தனி ஒருவனாக தூக்கக் கூடிய பலம் அவனுக்கு இருக்கவில்லை. அதற்கான கயிறோ ஏனைய வசதிகளோ எதுவும் இருக்கவில்லை.

அப்போது அந்தப் பாதை வழியே சென்ற சிலரை அவன் உதவிக்கு அழைத்தான். அவர்களும் முயற்சித்து விட்டு "இதனைத் தூக்க எங்களால் முடியாது. பள்ளம் ஆழமாக உள்ளது. ஆனால் அதன் வாய்ப்பக்கம் குறுகியதாக இருக்கிறது. கழுதைக்குப் பலத்த அடியும் ஏற்பட்டிருக்கும் போல் உள்ளது. ஆதலால் கழுதையைக் காப்பாற்ற எண்ணி நீயும் பள்ளத்தில் வீழ்ந்து விடாதே!" என்று கூறிச் சென்றனர்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. ஆரம்பத்தில் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்த கழுதையின் குரல் பின்னர் தேய்த்து ஒலிக்கத் தொடங்கியது. தொழிலாளி மிகக் கவலையடைந்தான்.

கழுதையின் குரல் பின்னர் முற்று முழுதாக ஓய்ந்தும் விட்டது. தொழிலாளி மிகக் கவலையடைந்தான். கழுதை பெரிய அளவில் அடிபட்டதால் இறந்திருக்கலாமென முடிவுக்கு வந்தான். அவன் மனதில் ஒரு வைராக்கியம் எழுந்தது. அந்தப் பள்ளத்தால் தனது கழுதைக்கு ஏற்பட்ட அவலம் வேறு எவருக்கும் ஏற்படக் கூடாது என எண்ணினான். உடனே அங்கே பள்ளத்தைச் சூழ இருந்த மணல் எல்லாவற்றையும் அள்ளிப் போட்டு பள்ளத்தை சமமாக ஆக்கிக் கொண்டிருந்தான்.

அவ்வளவு நேரமும் அமைதியாகப் படுத்திருந்த கழுதை தன் மேல் மண் விழுந்ததும் சிலிர்த்து எழுந்து நின்றது. தொடர்ந்து தொழிலாளி மண்ணைக் கொட்ட கொட்ட கழுதையோ அந்த மண்ணைப் படிக் கட்டாக்கி மேலே மேலே வந்து இறுதியில் வெளியே பாய்ந்து வந்தது. கழுதையை உயிருடன் கண்ட தொழிலாளி அதைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதான். எமக்கு வரக் கூடிய துன்பங்களும் அவலங்களும் சோதனைகளும் நாம் முன்னரை விட முன்னேற வேண்டும் என்பதற்காகக் கடவுளால் தரப்படுபவையாகும்.

10 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
10th Birthday - 18.07.2019
ராஜ்பவன் சுகன்யா தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி
செல்வி ரா.ரக்ஷன்யா
MISS.R.RAKSHANYA (RACHCHU)
தனது 10ஆவது பிறந்த தினத்தை கனடாவில் (Markham, Canada) உள்ள தனது இல்லத்தில் அப்பா, அம்மா, தங்கை அகன்யா (ஐஸ்), தம்பி தீக்ஷிதன் (குமரன்) மற்றும் உறவினர், நண்பர்களுடன் குதூகலமாக இன்று (18.07.2019) வியாழக்கிழமை கொண்டாடுகின்றார். இவர் பல்கலைகளும் கற்று, 16 செல்வங்களும் பெற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டுகள் வாழ நல்லூர் முருகப் பெருமானையும், வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பெருமானையும் வேண்டி மனதார வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர்:
"லாவண்யம்" 614/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (ஸ்ரீலங்கா)
தாத்தா (மாணிக்கம்), அம்மம்மா (பவா), கண்ணா மாமா, பிருந்தா மாமி (UK).



## சிந்தனைத் துளிகள்

- உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடையுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள்.
- தூய்மை உடையவன்தான் சிந்தனையாளனாக பகுத்தறிவாளனாக மற்றவர்களுக்கு வழிகாட்டியாக ஆகிறான்.
- உங்களை ஓர் ஏழை என்று எப்போது நினைக்காதீர்கள் பணம் சக்தியல்ல. பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும்.
- பணத்தைச் சம்பாதிக்க வேண் டும் என்பதற்காக ஒழுக்கத்தை விற்று விடாதே.
- பணக்காரன் ஆக வேண்டுமா? அதற்குப் பணத்தைக் குவிக்கவேண்டியது இல்லை. தேவைக்களைக் குறைத்துக்கொள்.
- வேலை செய்யாமல் பிறரிடம் பணம் பெறுவது பிச்சை எடுப்பதற்குச் சமம். எவ்விதமான வேலையும் இல்லாமல் இருப்பவனைப் பார்ப்பது கூட எமக்குத் தீமையை உண்டாக்கும்.
- பழிக்குப் பழி வாங்கியாக வேண்டும் என்ற எண்ணத்துடன் தண்டனை தருகின்ற அதிகாரம் மனிதர் எவருக்கும் கிடையாது.

## நன்றி தெரிவிக்கின்றோம்




எமது ஆலய புனரமைப்புக்கான நிதியை
ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்த பிரதேசசபை
உறுப்பினர்
**கௌரவ பொ.கமலநாதன்**
அவர்களுக்கும் சிபாரிசு செய்து உதவிய
வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர்
**கௌரவ சோ.சுகிர்தன்**
அவர்களுக்கும் பெருந்தொகை நிதியை
பெற்றுத்தந்த
நாடாளுமன்ற உறுப்பினரான
**மாவை. சோ.சேனாதிராசா**
அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**என்றும் நன்றியுடன்**
**அறங்காவலர்சபை**
**முதலிவளவு முத்துமாரியம்மன் கோயில்**
**(ஆழ்வார் ஒழுங்கை, காங்கேசன்துறை)**

THE HALO TRUST

## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

ஹேலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 23 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹேலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண். பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்புரவற்றதும். தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு : எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர் மேலும் பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 24ம் திகதி ஆடி மாதம் 2019 புதன்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**ஹேலோ ட்றஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு,**
**கிளிநொச்சி.**

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிவலை
தர்மகுலசிங்கம்
(தர்மா)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 26 |
| 05 | 07 |
| 1970 | 2002 |

**திதி: 18.07.2019**

அகல் விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல் தழைத் தோங்கி
இக மதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வத்திற்கு
17 ஆம் ஆண்டு நிறைவுதனில் அஞ்சலிகள் பல
என்றென்றும் உங்கள் நினைவுகளில்

கைதடி தெற்கு,
கைதடி.

தாய், சகோதரர்கள்.

## வேலைவாய்ப்பு

அச்சுவேலியில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு
**01. தொழிற்சாலை எலக்ரிசியன்**
**02. தொழிற்சாலை பிற்றர் (மெக்கானிக்)**
அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு : 077 0476588**

## வீடு காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன்
கொக்குவிலில் 2பரப்பு காணியில்
அமைந்த புதிய வீடு விற்பனைக்கு
உண்டு.

**076 702 3565**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம்
1987 இல் பிறந்த 34 ¾ பாவமுடைய
ஆசிரியராகப் பணிபுரியும்
மணமகனுக்கு மணமகள் தேவை.
(ஆசிரியர் விரும்பத்தக்கது.)

**077 857 7656/076 703 6509**

## வீடு வாடகைக்குண்டு

நல்லூர் சுற்றாடலில் இருவர்
தங்கக் கூடிய சிறிய வீடு வாடகைக்கு
உண்டு. (அரசாங்க உத்தியோகத்தர்
கள் விரும்பத்தக்கது)

**077 553 6015, 021 221 7740**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகருக்கு அருகில்
3¾ பரப்புக் காணி கிணற்றுடன்
விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

**077 641 6985**

## வேலைவாய்ப்பு

கொழும்பில் இயங்கும்
நிறுவனத்திற்கு
**01. கணக்காளர் (ஆண்)**
**02. எழுதுநர்**
**03. ஆசனப்பதிவாளர் (கொழும்பு - யாழ் பஸ்)தேவை**
தங்குமிட வசதியுண்டு சம்பளம்
நேரடியாக பேசி தீர்மானிக்கப்படும்

**தொடர்பு : 0770476588**

## வேலையாள்கள் தேவை

**01. வெல்டர் - (சம்பளம் 1500.00)**
**02.அலுமினிய பிற்றிங் - கட்டர் வேலை (சம்பளம் 1500.00)**
திங்கள் முதல் சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புக்கு : 076 310 1597**

ES
Printers
மக் பிரிண்ட்
(MUG)
450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

## OBITUARY



**B. S. A. ARIARATNAM**
*(Retired Teacher, Kopay Christian College)*

B. S. A. ARIARATNAM (Retired Teacher, Kopay Christian College) entered glory on 16th July 2019. Loving husband of Gnanasoundari Ariaratnam (Retired staff, Kachcheri, Jaffna), affectionate father of Nishan Ariaratnam (Teacher, St John's College, Jaffna), loving Father - in - Law of Romitha, loving Grandfather of Niron and Niroshini, Son of late Mr & Mrs C. M. Ariaratnam, Son - in - Law of late Mr & Mrs J. G. Thambiah, Loving brother of Jeyarani Albert (Malaysia), Jeyarajah, Inparani Karunairajah, Rajakumar and late Ariakumar. Funeral Service will take place at his residence at 4th Mile Post, Kopay South (Irupalai Junction) on Thursday, 18th July 2019 at 4.00 pm and burial at St James Church Burial Grounds, Nallur.

**Informant: Wife**

**Contact No. 021 223 0175 / 077 295 8799**

**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**அறிமுகவிழாவும் வழிகாட்டல் விரிவுரைகளும்**

2017/18 கல்வியாண்டுக்கு கலைப்பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்க்கான அறிமுகவிழாவும் வழிகாட்டல் விரிவுரைகளும் 22.07.2019 தொடக்கம் 26.07.2019 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. அழைப்பிதழ் மாணவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த நாள்களில் தவறாது கலந்துகொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(cs. 145384) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் விஞ்ஞான பாட ஆசிரியை
**திருமதி கௌரி நடராசா**
அவர்களின் தாயார்
**மகேஸ்வரி சின்னத்துரை**
கடந்த 16.07.2019 காலமானார் அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**நலன்புரிக்கழகம்**
**யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்**

## துயர் பகிர்வு



எமது கல்லூரியின் ஆசிரியையான
செல்வி **சர்மிளா**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**விஜயசுந்தரம் ஜீவன்குமார்**
அவர்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை.**

(CS 26732) (14.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது லயன்ஸ் கழகத்தின் 25 வருட நீண்டகால
உறுப்பினரும் 2014/15 ஆம் ஆண்டின் கழகத் தலைவருமாகிய
**லயன். சோமசுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா**
*(பொறியியலாளர், அகில இலங்கை சமாதான நீதவான்)*
அவர்களின் திடீர் இழப்பினையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகம்**
**மானிப்பாய் கோவிற்பற்று லியோ கழகம்**
**மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை லியோ கழகம்**
**இளவாலை புனித ஹென்றியார் கல்லூரி லியோ கழகம்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
14 . 08 . 1933



ஆண்டவன் அடியில்
29 . 07 . 2018

## அமரர் செல்லத்துரை இராசரத்தினம் (J.P)

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் யாழ். மாநகரசபை)

திதி : அபரபக்க துதியை



சீலம் அறம் தருமம் வாய்மை ஒழுக்கநெறி
தானம் தவம் மற்றும் தண்ணயுங் கொண்டோன்
தேசம் முழுதும் தழுவிப் பணிசெய்தோன்
ஞாலம் புகழும் சைவநெறி பரப்பும்
பாசம் மிகக்கொண்ட பண்புடையோன்
உண்மை நெறி கற்றுணர்ந்த உத்தமனாம்
பெரியார் இராசரத்தினம் பெயரினியார்
எண்ணித் திருப்பணிகள் பலபுரிந்தாய்
மண்ணில் வாழ்நல் அறிஞர் பலர் தொடர்பால்
உம் பணிகள் வென்ற பல நிகழ்வுகளை
- நாம் கண்டோம்
உம்முள்ளம் என்றும் இனியும் தமிழ்
- சைவ வளர்ச்சியையே
அல்லும் பகலும் அவாவியதை நாமறிவோம்
அன்புள்ள அப்பா!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும்
எம் அருகில் இருப்பதையே உணர்கின்றோம்.
உங்கள் புன்னகை, பொறுமை, பாசம் சமூக அக்கறை
என்றும் எங்களை வழிநடத்தும்
எம் குலதெய்வமாம் பிள்ளையார் அடியில்
சாந்திபெற வேண்டுகின்றோம்.

75/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**நீர்வேலி திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் தேங்கியுள்ள கழிவுகளை பைக்கோ லோடர் மற்றும் புல்டோசர் இயந்திரங்களின் உதவியுடன் ஒதுக்கி**

**துப்பரவு செய்தல் சேவைக்கான விலைமனு கோரல்**

தலைவர். பிரதேச சபை பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் தேங்கியுள்ள கழிவுகளை பைக்கோ லோடர் மற்றும் புல்டோசர் இயந்திரங்களின் உதவியுடன் ஒதுக்கி துப்பரவு செய்தல் சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இல | சேவை | சேவை வழங்க எதிர்பார்க்கப்படும் இயந்திர வகை | எதிர்பார்க்கப்படும் இயந்திர வேலை மணித்தியாலங்கள் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பிணைத்தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | பைக்கோலோடர் மற்றும் புல்டோசர் இயந்திரத்தின் உதவியுடன் திண்மக்கழிவுகளை ஒதுக்குதல். | 1. Bull Dozer (Chain wheel) 2.Backo Loader | தலா 30 மணித்தியாலங்கள் | 10,000.00 | 2019.11.05 |

1. சேவை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் இயந்திர வேலை மணித்தியாலங்கள் 20% அளவில் வேறுபடமுடியும்.
2. சேவை வழங்குனர் குறித்த சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடையவராக இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. சேவை வழங்குநர்கள் பைக்கோ லோடர் இயந்திரத்தின் உதவியுடன் திண்மக்கழிவுகளை ஒதுக்குதல் சேவை பெறுகைக்கான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பருத்தித்துறை வீதி புத்தூரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 2019.07.22 ஆம் திகதி தொடக்கம் 2019.08.02 ஆம் திகதி வரை அலுவலகநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூ 1000/- (வரிகள் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. பெறுகை ஆவணங்கள் 2019.08.02 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு "தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
6. இவ்வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தேவையேற்படின் தங்களால் கோரப்படுகின்ற விலைமனுவுக்கு அமைய பிரதேச சபையின் கோரிக்கையின் பிரகாரம் சேவை வழங்க தயாராக இருத்தல் வேண்டும்.
7. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தியாகராஜா நிரோகஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2019.07.17**

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் T. **உதயதாஸ்ஐயர்** அவர்களின் அன்புத்தந்தை **சிவசிதம்பரஐயர் துரைசாமிஐயர்** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரினது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## முத்தையா ஜெயசோதி

(முன்னாள் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்)

தோற்றம் 01.01.1956

மறைவு 29.07.2018



மண்ணில் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்து
எண்ணில் கருமமியற்றி - நேற்று
விண்ணில் சென்றீர்கள் - முக்
கண்ணுடையான் பாதம் சேரவென

முத்தையா தருமைந்தன் முத்தான ஜெயசோதி
அவதார புருசராக நாரந்தனை மண்ணுதித்தார்.
தோன்றிற் புகழடைந்து கல்வி கேள்வி சிறந்து
திரைகடலோடி திரவியம் சேர்த்து
தவமெனவே தோன்றிற் புகழடைந்து
புவனமெங்கும் கடும்பணிகளாற்றி
நவ நவமாய் நற் தொண்டுகள் புரிந்து
பண்ணாக மண் புகுந்து நாகலிங்கம் சாந்தினியை
- கரம்பிடித்து
தவமான மனை மக்கட் பேறடைந்து
எவரெவர்க்கும் இனிய சொற் கூறி அரவணைத்து
வளமான வாழ்வெமக்குக் காட்டி,
கவனமாய்க் காத்து கல்விதனையூட்டி
அவையத்து முந்தியிருக்கச்செய்து வழிகாட்டி
சிவனடியைச் சென்றடைந்த ஆண்டு ஒன்றில்

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
05 . 02 . 1955



இறப்பு
15 . 07 . 2019

## சின்னப்பு செல்வநாயகம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் D5 பூநகரி வீதி, பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்வநாயகம் 15.07.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுகந்தினியின் அன்புக் கணவரும், சகானா, அன்ரனி, ரதனிகா, டிலாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2019) வியாழக்கிழமை அவரது இலத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பரந்தன் அந்தோனியார் ஆலயத்தில் இறுதி வழிபாட்டிற்காக வைக்கப்பட்டு பரந்தன் கோரக்கன்கட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 326 9802

(c 23037) (13.17)

# திரையுலகினரை ஆச்சரியப்படுத்திய சமந்தா



தமிழ், தெலுங்கு பட உலகில் முன்னணி நடிகையாகஇருக்கிறார்சமந்தா. அவர்துநடிப்பில் கடந்த வருடம் இரும்புத்திரை, சீமராஜா, யூ டர்ன், நடிகையர் திலகம் ஆகிய படங்கள் திரைக்கு வந்து வரவேற்பை பெற்றன. கணவர் நாகசைதன்யாவுடன் நடித்து கடந்த மாதம் திரைக்கு வந்த மஜிலி படமும் வசூல் குவித்தது.

தற்போது நாகார்ஜுனா, ரகுல்பிரீத் சிங் ஜோடியாக நடிக்கும் 'மன்மதடு 2' தெலுங்கு படத்தில் கவுரவ தோற்றத்தில் வருகிறார். 5 நிமிடம் மட்டுமே இந்த காட்சிஇடம்பெறுகிறது. இதில்நடிக்கசமந்தாரூ. 35 லட்சம் சம்பளம் வாங்கியதாக தெலுங்கு பட உலகில்தகவல்பரவிநடிகர்,நடிகைகளை ஆச்சரியப்படுத்தி உள்ளது.

## twitter

ரஹீம் கஸ்ஸாலி@RahimGazzali



ஒரு கையில் அடிபட்டு கட்டு போட்டிருக்கும்போது, சொறியவே வாய்ப்பில்லாத எதிர்பக்கம் அரிப்பது சத்திய சோதனை.

amudu@amuduarattai



கேமரா மொபைல்கள் வரும்வரை, போட்டோ எடுப்பது என்பது ஆடம்பரமாகத்தான் இருந்தது.

பாண்டி பிரகாஷ்@pandi_prakash_



ஒரு விசயத்தை செய்யும் முன் இல்லாத அறிவு அந்த விசயத்தை செய்து முடித்து அவமானப்பட்ட பின் வருகிறது..

படித்ததில் பிடித்தது

# நிரந்தரமற்றது வாழ்க்கை

ஒரு கிராமத்தில் வசித்து வந்த ஒரு மனிதன் திடீரென இறந்து போனான்., அவன் அதை உணரும் போது, கையில் ஒரு பெட்டியுடன் கடவுள் அவன் அருகில் வந்தார்..

**கடவுள் :**
"வா மகனே.... நாம் கிளம்புவதற்கான நேரம் வந்து விட்டது.."

**மனிதன் :**
"இப்பவேவா? இவ்வளவு சீக்கிரமாகவா? என்னுடைய திட்டங்கள் என்ன ஆவது?"

**கடவுள் :**
"மன்னித்துவிடு மகனே.... உன்னைக் கொண்டு செல்வதற்கான நேரம் இது.."

**மனிதன் :** "அந்தப் பெட்டியில் என்ன உள்ளது?"

**கடவுள் :** "உன்னுடைய உடைமைகள்....."

**மனிதன் :** "என்னுடைய உடைமைகளா!!! என்னுடைய பொருட்கள், உடைகள், பணம்,.... எல்லாமே இதில் தான் இருக்கின்றனவா?"

**கடவுள் :** "நீ கூறியவை அனைத்தும் உன்னுடையது அல்ல.. அவைகள் பூமியில் நீ வாழ்வதற்கு தேவையானது.."

**மனிதன் :** அப்படியானால், "என்னுடைய நினைவுகளா?"

**கடவுள் :** "அவை காலத்தின் கோலம்...."

**மனிதன் :** "என்னுடைய திறமைகளா?"

**கடவுள் :** "அவை உன் சூழ்நிலைகளுடன் சம்பந்தப்பட்டது...."

**மனிதன் :** "அப்படியென்றால் என்னுடைய குடும்பமும் நண்பர்களுமா?"

**கடவுள் :** "மன்னிக்கவும் குடும்பமும் நண்பர்களும் நீ வாழ்வதற்கான வழிகள்...."

**மனிதன் :** "அப்படி என்றால் என் மனைவி மற்றும் மக்களா?"

**கடவுள் :** "உன் மனைவியும் மக்களும் உனக்கு சொந்தமானவர்கள் அல்ல, அவர்கள் உன் இதயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள்...."

**மனிதன் :** "என் உடலா?"


**கடவுள் :** அதுவும் உனக்கு சொந்தமானதல்ல.... உடலும் குப்பையும் ஒன்று....

**மனிதன் :** "என் ஆன்மா?"

**கடவுள் :** அதுவும் உன்னுடையது அல்ல..., அது என்னுடையது....... மிகுந்த பயத்துடன் கடவுளிடமிருந்து அந்தப் பெட்டியை வாங்கி திறந்தவன், காலி பெட்டியைக் கண்டு அதிர்ச்சியடைகிறான்.. கண்ணில் நீர் வழிய கடவுளிடம், "என்னுடையது என்று எதுவும் இல்லையா?" எனக் கேட்க,

கடவுள் சொல்கிறார், "அதுதான் உண்மை.. நீ வாழும் ஒவ்வொரு நொடி மட்டுமே உன்னுடையது.. வாழ்க்கை என்பது நீ கடக்கும் ஒரு நொடி தான்.. ஒவ்வொரு நொடியையும் சந்தோஷமாக வாழ் எல்லாமே உன்னுடையது என்று நினைக்காதே........" ஒவ்வொரு நொடியும் வாழ் உன்னுடைய வாழ்க்கையை வாழ் மகிழ்ச்சியாக வாழ் அது மட்டுமே நிரந்தரம்..

குடும்பம்




## அறிவு தலைக்கு கிரீடம்

சிறிய கடன் கடனாளியை உருவாக்கும். பெரிய கடன் எதிரியை உருவாக்கும்.

**சைரஸ்**

உழைப்புக்கு ஓர் உதாரணம் எறும்பு, மற்றொன்று இதயம்.

**- அமெரிக்கா**

சோம்பல் அனைத்தையும் கடினமாக்கும். சுறுசுறுப்பு அனைத்தையும் எளிதாக்கும்.

**- ஜப்பான்**

சிறிய புண்களையும் ஏழை உறவினர்களையும் ஒரு போதும் அலட்சியம் செய்யாதீர்கள்.

**- ஸ்வீடன்.**

அறிவு தலைக்கு கிரீடம், அடக்கம் காலுக்குச் செருப்பு.

**- ஹீப்ரு.**












உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எங்கும் பரவிப் பரவும் பௌத்த அத்துமீறல்

வடக்கில் முல்லைத்தீவில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமிப்பதற்கான முயற்சி, கிழக்கில்கன்னியாவில்வெந்நீரூற்றுபிள்ளையார்ஆலயத்தை இடித்தழித்துவிட்டு அங்கே விகாரை அமைக்கும் முயற்சி, யாழ்ப்பாணம் வலி. வடக்கிலே எந்தவித அனுமதியும்இன்றிப்படையினர்மகாபோதிஅமைப்பு என்று தீவிரம் பெற்றிருக்கும் பௌத்த ஆக்கிரமிப்பு, சிறுபான்மையினர் மீதான பௌத்த மயமாக்கல் கடைசியில் மலையகத்தையும் இலக்கு வைக்கத் தவறவில்லை.

நுவரெலியா, கந்தப்பளை தோட்டப் பகுதியில் உள்ள காவல் தெய்வ சன்னதியில் பௌத்த விகாரை அமைக்கும் முயற்சியாக பொலிஸ் அதிகாரியின் உதவியுடன் தேரர் ஒருவரால் பௌத்த மதக் கொடி ஏற்றப்பட்டதை அடுத்து அங்கு பதற்றம் தொற்றிக்கொண்டது. மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அந்தக் கொடி அகற்றப்பட்டுள்ளது. கந்தப்பளையில் உள்ள தமிழ் மக்களின் காவல் தெய்வமான மாடசாமியின் கல்லைஅகற்றிவிட்டுஅந்தஇடத்தில்விகாரைஒன்றை அமைப்பதற்கான முயற்சியே மேற்கொள்ளப்பட்டது என்று மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அந்த இடத்தில் பௌத்த கொடியை நாட்டுவதற்கு உதவியவர்ஒருபொலிஸ்அலுவலர்தான்என்றும்அவர்கள் கூறுகின்றார்கள். எனினும் நுவரெலியப் பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்துக்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன்பேசிஅந்தக்கொடியைஅங்கிருந்துஅகற்றச் செய்திருக்கிறார். இதையடுத்து இந்தப் பிரச்சினை அடங்கிப்போய்விட்டது என்றாலும் இது போன்று சிறுபான்மை மக்களின் வழிபாட்டிங்களைக் குறிவைத்து, அதிலும் இந்துக்களின் தொன்மை வழிபாட்டிடங்களைக் குறிவைத்து அவற்றைப் பௌத்தமயமாக்கும் செயற்பாடுகள் தீவிரமடைந்திருப்பது கவலையளிப்பதுடன் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஓர் அச்ச நிலையையும் இது ஏற்படுத்தியுள்ளது.

சிங்கள, பௌத்த தேசிய நிகழ்ச்சி நிரலின் கீழான இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆட்சியாளர்கள் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசியல்வாதிகள் தவறியிருப்பதே இதற்கான காரணம். குறிப்பாக, பொதுபல சேனாவின் பொதுச் செயலரான அத்தே ஞானசார தேரர் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட பின்னர் இந்த நடவடிக்கைகள் மேலும் தீவிரமடைந்திருப்பது கண்கூடு. இந்த நாடுசிங்கள, பௌத்தர்களின்நாடுஎன்றுஅவர்மீண்டும் மீண்டும்கூறிவருகின்றார். அதனாலேயே இங்கே வேறு மத, இனஅடையாளங்கள்உறுதியாகஉள்ளபகுதிகளில் பௌத்தஅடையாளங்களைநிறுவும்நிகழ்ச்சிதுரிதமாக்கப்படுகின்றது.

பல்லின, பல மத, பல சமூக மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டின் அரசாகப் பெரும்பான்மைச் சமூகத்தின் இத்தகைய அத்துமீறலைக்கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பும்கடமையும்ஆட்சியாளர்களுக்குஇருக்கின்போதும் அதனை அவர்கள் செய்யவில்லை. குறைந்தபட்சம் இத்தகையநடவடிக்கைகளுக்கும்பௌத்ததீவிரவாதக் கருத்துக்களுக்கு எதிராகத் தமது குரலை உயர்த்துவதற்குக்கூட அவர்கள் தயங்குகிறார்கள் என்பதே சிங்கள, பௌத்த நிகழ்ச்சி நிரலுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி. அதனாலேயே அவர்கள்துணிவு பெற்று மேலும் மேலும் அத்துமீறல்களில் ஈடுபடுகிறார்கள்.

போருக்குப்பின்னர்முஸ்லிம்கள்இலக்குவைக்கப்பட்டார்கள். பின்னர் கிறிஸ்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். அதன் பின்னர் இந்துக்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். இப்போதுமலையத்துபாரம்பரியவழிபாட்டிடங்கள் இலக்கு வைக்கப்படுகின்றன. இதன் பின்னால் உள்ள நிகழ்ச்சி நிரலைப் புரிந்துகொள்வது கடினமானது அல்ல. இதனைத்தடுத்துநிறுத்த ஆட்சியாளர்கள் உடன்நடவடிக்கைஎடுக்கவேண்டும். தவறின்அனைத்துச் சிறுபான்மை இனங்களும் மதங்களும் தம்மை எப்பாடுபட்டாவதுதற்காத்துக்கொள்ளும்நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாக மாறிவிடும். அத்தகையதொரு நிலை இலங்கைக்கு நன்மையளிப்பதாக இருக்காது.



# எங்கும் குழப்பம் எதிலும் குழப்பம் நாட்டுக்கு விமோசனம் கிடைக்குமா?

இந்துமதி

நாடு ஒட்டுமொத்தமாகவே குழும்பிய நிலையில் காணப்படுகின்றது. அரசியல், பொருளாதாரம், சமூகம் என அனைத்துத் துறைகளும் நம்பிக்கையூட்டும் நிலையில் இல்லை. அரசியல்வாதிகள் நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் சிந்திக்காது தம்மையும் தமது குடும்பத்தையும் மட்டுமே சிந்திக்கின்றனர். பதவிகளுக்காக எதைச் செய்வதற்கும் தயாராகவே உள்ளனர்.

வீணான அரசியல் முயற்சிகளால் நேரம் மட்டுமல்லாது நாட்டின் நிதியும் விரயமாவதைக் காண முடிகிறது. மக்கள் முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிசுபிசுத்துப் போய் விட்டது. கூட்டமைப்பின் ஆதரவு கிடைத்ததால் அரசு தப்பிப் பிழைத்தது. மீண்டுமொரு தடவை தமிழர்களின் பலம் நிரூபிக்கப்பட்டது. அரசின் வீழ்ச்சியைக் காண்பதற்காக காத்திருந்தவர்கள் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகினர். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் சிலர் அரச தலைவருக்கு எதிராக குற்றவியல் தீர்மானம் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்குத் தயாராகி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நிகழ்த்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு அரச தலைவர் பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்தே அவருக்கு எதிரான குற்றவியல் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முன்பாகச் சாட்சியமளித்த முன்னாள் பொலிஸ்மா அதிபரும் பாதுகாப்புச் செயலரும் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறுவது தொடர்பாகவே அரச தலைவருக்கு தகவல் வழங்கியதாகத் தெரிவித்தனர். இது உண்மையாகவிருந்தால் அதற்கு அரச தலைவர் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும். ஆனால் அரச தலைவருக்கு எதிராகச் சாட்சியமளித்த அந்த இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் தெரிவுக் குழுவின் முன்பாகச் சமூகமளிக்க முடியாதென அரச தலைவர் கூறியதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குண்டுத்தாக்குதலுக்குப்பின்னர்சிறுபான்மையின முஸ்ஸிம் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு இருக்கின்றனர். ஒரு சிலரின் பயங்கவரவாதச் செயல் முழு முஸ்ஸிம் சமூகத்தையும் வெகுவாகப் பாதித்து விட்டது. பௌத்த தேரர்களின் அச்சுறுத்தல் காரணமாக ஆளுநர் பதவிகளை வகித்த முஸ்ஸிம்களும் அமைச்சுப் பதவிகளை வகித்த அதே இனத்தைச் சேர்ந்தவர்களும் தமது பதவிகளைத் துறந்தனர். ஆடைகள் விடயத்தில் முஸ்ஸிம் பெண்கள் அவஸ்தைக்குள்ளாகினர். பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் தற்போதும் முஸ்லிம்களைச் சந்தேகக் கண் கொண்டே பார்க்கின்றனர். இது இரு சமூகங்களுக்கிடையில் பிளவுகளை அதிகரிக்கவே செய்யும்.

தமிழர்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் நிம்மதியாக வாழ்வதாகக் கூற முடியாது. படையினரால் அபகரிக்கப்பட்டவர்களின் சொந்த நிலங்கள் போர் ஓய்ந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் விடுவிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பாக எதுவுமே தெரியவில்லை. இறுதியில் போரின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு இறுதி வரை நீதி கிடைக்கவில்லை. அதிகாரப் பகிர்வு இடம்பெறாமையால் மாகாண சபைகளால் தமிழர்கள் எவ்வித நன்மைகளையும் அனுபவிக்க முடியவில்லை. அரசின் உதவியுடனான சிங்களக் குடியேற்றங்களும், வகை தொகையின்றி பௌத்த விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளும் தமிழர்களின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது. தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களும் ஆலயத்தை எதிர்நோக்கிய நிலையில் உள்ளன. இது மட்டுமல்லாது தமிழர் பகுதிகளில் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கான செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையால் ஏராளமான தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி அவல நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். முன்னர் இயங்கிய தொழிற்சாலைகளையாவது இயங்க வைத்தால் இந்தப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைத்துவிடும். நாட்டுக்கும் வருமானம் கிடைக்கும். ஆனால் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவில்லை. மேலும் அரச துறைகளில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேர்ச்சியுள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதால் வடக்கிலுள்ள வேலையற்றவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். வடக்கில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு இங்குள்ள தகுதி உள்ளவர்கள் நியமிக்கப்பட்டால் எவ்வளவோ பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

தமது பதவிக் காலம் தொடர்பாக அரச தலைவரே குழம்பிக் கிடக்கின்றார். தமது பதவிக் காலம் 6 ஆண்டுகளா? அல்லது 5 ஆண்டுகளா? என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் இது தொடர்பாக ஏற்கனவே அவருக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அவரது பதவிக்காலம், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதால் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தினுள் அரச தலைவர் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆனால் அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் கூறுகின்றார். இதற்கான அவகாசம் கிடைக்குமா? என்பது சந்தேகமே. அது மட்டுமல்லாது மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் சட்டச்சிக்கல்களும் எழுந்துள்ளன. இவ்வாறு எதையெடுத்தாலும் குழப்பமான ஒரு நிலை தான் இந்த நாட்டில் காணப்படுகிறது. இது நிவர்த்தி செய்யப்படாத வரையில் விமோசனத்தை நாடு எதிர்கொள்ள முடியாது.

> “தமிழர்களைப் பொறுத்த வரையிலும் அவர்கள் நிம்மதியாக வாழ்வதாகக் கூற முடியாது. படையினரால் அபகரிக்கப்பட்டவர்களின் சொந்த நிலங்கள் போர் ஓய்ந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் விடுவிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. காணமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பாக எதுவுமே தெரியவில்லை. இறுதியில் போரின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு இறுதிவரை நீதி கிடைக்கவில்லை.





# செவிடன் காதில் ஊதிய சங்காக மாகாணசபை தேர்தல் விவகாரம்

## ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்துமாறு கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் வலியுறுத்தல்

*கொழும்பு, ஜூலை 18*

*அரசதலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தலாம். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தொடர்ச்சியாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் வலியுறுத்தி வருகின்றார். எனினும், அவரது கூற்று செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கின்றது.' இப்படித் தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அகமட்.*

இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''வார வாரம் தேர்தல் நிலைப்பாடுகள் குறித்துக் கருத்துத் தெரிவித்துவரும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அண்மைய பத்திரிகை ஆசிரியர்களின் சந்திப்பின் போது ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தத் தாம் தயாராக இருப்பதாகவும், இதனால் அரச தலைவர் தேர்தல் நடைபெறுவதற்கு எந்தவித பாதிப்பும் இல்லை எனவும் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

2015ஆம் ஆண்டு முதல் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு வருகின்றது. எனினும், 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இதனை நடத்துவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், எல்லை மீள்நிர்ணயக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதில் இழுபறி நிலை காணப்பட்டுப் பின்னர் கொண்டுவரப்பட்ட போதும் அது தோல்வியைத் தழுவியது.

இந்தநிலையில் மீளாய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு இந்த அறிக்கை ஆராயப்பட்டது. எனினும், எதுவும் நடக்கவில்லை. இந்த நிலையில், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு பதவியேற்றதை அடுத்து மாகாண சபைத் தேர்தல்களைப் பழைய முறையில் நடத்துவது என அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இது நாடாளுமன்றத்துக்கு வந்து நிறைவேறும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் இழுபறி நிலையே ஏற்பட்டது.

தற்போதுகூட இந்தப் பத்திரத்தை முன்னிறுத்தி நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் இந்தத் தேர்தலை இதுவரையில் நடத்தி முடித்திருக்கலாம். ஆனால், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தட்டிக்கழிப்புகளையே கைக்கொண்டு வருகின்றார். இதற்கு முதன்மைக் காரணம் தோல்விப் பயம் என நாம் கருதலாம்.

தற்போதைய நிலையில் இந்த விடயம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தலைமை அமைச்சரை நேரில் கண்டு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டபோது, கட்சித் தலைவர்களிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார் என மகிந்த தேசப்பிரிய பத்திரிகை ஆசிரியர்கள் சந்திப்பில் மேலும் தெரிவித்திருக்கின்றார். இந்தக் கருத்தானதும் தலைமை அமைச்சரின் நழுவல் போக்கையே எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, மக்களின் ஜனநாயக உரிமைகளை மதித்தும், அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்; இல்லையேல் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பதவியை நான் துறப்பேன் என அறிவித்திருக்கும் மகிந்த தேப்பிரியவின் கருத்தைக் கவனத்தில் கொண்டும் அரசு உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றுள்ளது. (ம-22)

# இலங்கை மக்கள் கண்ட சந்திர கிரகணம்

கொழும்பு, ஜூலை 18

நேற்றுமுன்தினம் சந்திர கிரகணம். இதை இலங்கை மக்கள் பகுதியளவில் கண்டனர். இந்த சந்திர கிரகணம் நேற்று நள்ளிரவு 12.13 மணிக்கு ஆரம்பமாகியதுடன் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 5.47 மணிவரை காணப்பட்டது.



இது இந்த வருடத்துக்கான இறுதி சந்திர கிரகணம் என்பதுடன், 2021ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதியே இலங்கையர்களுக்கு அடுத்த சந்திர கிரகணம் தென்படும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ம)

# பொது நிலையினர் கழகத்தின் வருடாந்த மாநாடு

கொழும்புத்துறை, ஜூலை 18

யாழ்ப்பாண மாவட்ட பொது நிலையினர் கழகத்தின் வருடாந்த மாநாடு பாதுகாவலன் மண்டபத்தில் இயக்குநர் அருட்பணி யோ.யோ.மவுலிஸ் அடிகளின் வழிகாட்டலில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது பொதுநிலைப் பணிகளை ஊக்குவித்த அருட்பணியாளர்கள், நீண்டகாலம் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பொது நிலையினர் ஆகியோருக்கு யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொன்னாடை போர்த்தி விருது வழங்கி மதிப்பளித்தார்.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்பணி எஸ்.ஜே.இம்மனுவல் அடிகள், பொது நிலையினர் கழகத்தின் முன்னாள் இயக்குநர் அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகள், யோசவ்வாஸ் இறையியல் கல்லூரிப் பதிவாளர் பி.பிரான்சிஸ், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் பி.வின்சன் டி போல் ஆகியோரே மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-135)

# வவுனியாவில் கஞ்சாவுடன் இருவர் நேற்று கைதாகினர்

வவுனியா, ஜூலை 18

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையில் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கிளிநொச்சியிலிருந்து அனுராதபும் நோக்கிச் சென்ற இருவரைச் சோதனையிட்ட போதே மேற்படி அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 41 மற்றும் 43 வயதுடையவர்கள். அவர்கள் நீண்டகாலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

# கட்டட தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி திறப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் வி.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-422)

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கணக்காளர் நேற்றுக் கடமையேற்கவில்லை

கொழும்பு, ஜூலை 18

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள கணக்காளர் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அவர் கடமைகளை நேற்று ஏற்கவில்லை.

பிரதேச செயலகத்துக்கு கணக்காளராக நியமிக்கப்பட்டிருப்பவரின் தற்போதைய கடமைகளை பொறுப்பேற்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை 1993ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் முழுமையான பிரதேச செயலகமாக இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசியல் ரீதியாக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. சில முஸ்லிம் அரசியல் தலைமைகளின் அழுத்தம் காரணம் அது நடைமுறைப்படுத்தப்படாால் இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுத்து பொதுமக்கள் போராட்டங்களை முன்னெடுத்ததுடன் சிவில் அமைப்புக்கள் மற்றும் சமய தலைவர்களால் உணவு ஒறுப்புப் போராட்டமும் நடத்தப்பட்டது.

இந்நிலையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக. கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் அரசுக்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் விவகாரத்தில் கல்முனை பிரதேச செயலக தரம் உயர்த்தல் முக்கிய அம்சமாக காணப்பட்டது.

முதற்கட்டமாக சகல அதிகாரமும் கொண்ட நிதிப்பிரிவு உருவாக்கி தனித்துவமான கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்கும் அனைத்து தரப்பும் இணங்கி, தேவையான விடயங்களும் ஆவண ரீதியாக நிறைவடைந்ததன் பின்னரே கூட்டமைப்பு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருந்தது. இந்த நிலையில், உகண பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தமிழ் அலுவலர் ஒருவரே கல்முனைக்கு கணக்காளராக நியமிக்கப்பட்டார். அவருக்கான இடமாற்ற கடிதம் வழங்கப்பட்டபோதும் உகண பிரதேச செயலகத்துக்கு பதில் கணக்காளர் இதுவரை நியமிக்கப்ப டாததால் அவர் தனது புதிய பொறுப்பை ஏற்க முடியவில்லை. (ஒ.5)

# பொதுக் கூட்டமும் உறுப்பினர் தெரிவும்

கொடிகாமம், ஜூலை 18

யாழ்ப்பாணம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆண்டுப் பொதுக் கூட்டமும், புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-159)

# சிவசிதம்பரத்தின் 96 ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள்

வடமராட்சி, ஜூலை 18

மறைந்த மு.சிவசிதம்பரத்தின் 96 ஆவது பிறந்த நாள் நாளைமறுதினம் சனிக்கிழமை கரவெட்டியில் நினைவு கூரப்பட வுள்ளது. மறைந்த மு.சிவசிதம்பரம் தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற முன்னாள் உபசபாநாயகரும், உடுப்பிட்டி நல்லூர் தொகுதிகளின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமாவார்.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் சிறப்பு ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இடம்பெறும்.

தொடர்ந்து முற்பகல் 9 மணியளவில் நெல்லியடி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்படும். நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ-173)

# திறன் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம் குடமியன் அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக வரணி ஒன்றிய (லண்டன்) உதவிப் பொருளாளர் ந.அமலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வரணி ஒன்றியம் (லண்டன்) ஒழுங்கமைப்பில் ரட்ணம் பவுண்டேஷன் (லண்டன்) அமைப்பினரால் இந்த திறன் வகுப்பறை அன்பளிப்பு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)



## அடிக்கல் நடும் நிகழ்வு

கொடிகாமம், ஜுலை 18

யாழ்ப்பாணம் சுன்னாகம் தபால் நிலைய புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் தபாலக வளாகத்தில் நடைபெற்றது. சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் தலைவர் சி.குமரவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண துணை அஞ்சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், சுன்னாகம் தபால் நிலைய தபாலதிபர் திருமதி மஞ்சுளா ராஜராஜன், உடுவில் பிரதேச செயலர் ஜெயகாந்தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி. தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் க. தர்சன், சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் செயலர் சபா புஸ்பநாதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் கோரிக்கைக்கமைய தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோகணேசனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 கோடியே 80 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (ஜ-159)

# எப்போது வேண்டுமானாலும் ஆயுதம் தூக்க நாம் தயார்!

### ரணிலுக்கு மாணவர் நிரூபித்துள்ளனரென சித்தார்த்தன் எம்.பி. தெரிவிக்கிறார்



யாழ்ப்பாணம், ஜூலை 18

**எமது பாதுகாப்புக்கு எப்போது வேண்டுமானாலும் நாம் ஆயுதம் தூக்கவும் தயாராகவே இருக்கின்றோம் என்பதனை எமது மாவட்ட இளைஞர்கள் தலைமை அமைச்சரின் கண் முன்னாலேயே நிரூபித்துள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவின் பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முதன்மை விருந்தின ராகக் கலந்து கொண்டார்.

அதன்போது கல்லூரி மாணவர்களின் கடேற் பிரிவினரின் வரவேற்பு அணி வகுப்பு இடம்பெற்றது. இதன்போது மாணவர்கள் துப்பாக்கி ஏந்தி நின்றமை தொடர்பில் கூறப்படும் கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடேற் மாணவர் படைப் பிரிவு இலங்கை முழுவதும் உண்டு. அது குடாநாட்டிலும் உண்டு. இந்தக் கல்லூரியிலும் உண்டு. இந்தப் பிரிவினரே தலைமை அமைச்சரின் வரவேற்பு அணிநடையில் ஈடுபட்டனர்.

இங்கே தலைமை அமைச்சருக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டுள்ளது. அதாவது "தேவை ஏற்பட்டால் எமது பாதுகாப்புக்கு எப்போது வேண்டுமானாலும் நாம் ஆயுதம் தூக்கத் தயாராகவே இருக்கின்றோம்" என்பதே அது.

அதற்காக அந்த மாணவர்கள் கையில் ஆயுதம் தூக்கிப் போராட்டத்துக்கு அழைப்பு விடவில்லை.

இந்த மாணவர்களை இவ்வாறு அணி நடைக்குப் பயன்படுத்துவது அவர்கள் ஆயுதம் வைத்திருந்தமை அனைத்தும் எமது அரசியலுக்கு உட்பட்டதல்ல. மாறாக பாடசாலையினதும் கல்வித் திணைக்களத்தினதும் முடிவே - என்றார். (த-105)



## புதிய யாழ். மாவட்ட தளபதி பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜுலை 18

இதுவரை காலமும் 59ஆவது படைப் பிரிவின் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ருவன் வனிகசேகர யாழ்ப்பாண படைகளின் தளபதியாகப் பதவியேற்றுள்ளார். கடந்த திங்கட்கிழமை பலாலி படைத் தளத்தில் நடைபெற்ற அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர் உத்தியோகபூர்வமாகத் தனது பதவியை ஏற்றுக்கொண்டார் .(ஜ)

எந்தவொரு பிறப்பு,இறப்பு,விவாகப் பதிவுக்கும்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இனிமேல் சான்றிதழ்களைப் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஜுலை 18

நாட்டில் எந்த மாவட்டத்தில் பிறந்திருந்தாலும் அவர்களுடைய பிறப்பு,இறப்பு, விவாகச் சான்றிதழ்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.கடந்த மே மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் இந்தச் சேவை இடம்பெற்று வருவதாக பிரதேச செயலர் யசோதா தெரிவித்தார். (ஜ)

## திண்மக் கழிவுகளை பிரித்து வழங்கவும்

### பருத்தித்துறை பிரதேச சபை பொதுமக்களிடம் கோரிக்கை

வடமராட்சி,ஜுலை 18

பருத்தித்துறைப் பிரதேசசபைக்கு உட்பட்ட பிரதேசத்தை அழகாகவும், ஆரோக்கியமானதாகவும் மாற்ற திண்மக் கழிவுகளைக் குடியிருப்பாளர்களும், வர்த்தகர்களும் பிரித்து ஒப்படைக்குமாறு பிரதேசசபை கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதேச சபை பொதுமக்களுக்குத் துண்டறிக்கை மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளாதாவது:

"திண்மக் கழிவானது திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்துக்கு அமைவாக அகற்றப்படாமையால் எமது பிரதேசம் அழகற்றதாகவும், சுகாதாரக் கேடுள்ளதாகவும் மாறிவருகின்றது. எமது பிரதேசத்தை அழகாகவும் ஆரோக்கியமானதாகவும் உருவாக்குவது எம் அனைவரினதும் கரங்களிலும் மனங்களிலுமே தங்கியுள்ளது.

மேற்கத்தைய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் வெற்றியளிப்பதற்கு அந்தநாட்டு மக்களே காரணம். எமது நாடும் அவ்வாறே மாறவேண்டும். ஆகவே உங்கள் வீடுகளில் சேரும் திண்மக்கழிவுகளை நீங்களே தரம்பிரியுங்கள். உக்கக் கூடிய கழிவுகளை உங்கள் வீடுகளிலே வீட்டுத்தோட்டம் அமைத்து உரமாக்கி நீங்களே பயன்படுத்துங்கள்.

இதனைக் கருத்தில் கொண்டு பிரதேச சபையின் திண்மக்கழிவுகற்றல் சேவை தொடர்பாக பின்வரும் விடயங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றது.

உக்ககூடியகழிவுகளைதங்களதுவீட்டுத்தோட்டத்துக்கு பசளையாக்க கூடிய முறைமை செய்வதற்கு வசதியில்லாதவர்களிடம் இருந்து மாத்திரம் சேகரிக்கப்படும்.

வீடுகள், வியாபார நிலையங்களில் சேரும் கழிவுகளில் இரும்பு பிளாஸ்ரிக் கண்ணாடிப் பொருள்கள் பொலித்தீன் பை ஆகியவற்றைத் தனித்தனியாக 4 பைகளில் தரம்பிரித்து வைத்துக்கொள்ளவும். தரம்பிரிக்காத கழிவுகளை எம்மால் பொறுப்பேற்றுக் கொள்ளமுடியாது.

இலத்திரனியல் கழிவுகள், பற்றிகள் போன்ற கழிவுகளை வழமையான கழிவுகளுடன் சேர்க்காது சேகரித்து வைக்கவும். இவை தனியாகச் சேகரிக்கப்படும்.

வீடுகள், வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும் பொது இடங்களிலும் மற்றும் ஆள் நடமாட்ட இடங்களிலும் சுகாதாரக் கேடான முறையில் கழிவுகளை இடுவது தண்டனைக்குரியது.

பிரதேசத்தில் வாரத்தில் முழுநாள்களும் திண்மக்கழிவுகள் சேகரிக்கப்படும். ஒவ்வொரு பகுதியிலும் மாதத்தில் இரு நாள்கள் பிளாஸ்டிக் மற்றும் போத்தல்கள் சேகரிப்படும்" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ -173)

# தென்மராட்சியில் இருவருக்கு 200 மணி நேர சமுகப் பணி தண்டம்

### கஞ்சாபீடி, சாரயம் வைத்திருந்ததற்காக

சாவகச்சேரி, ஜுலை 18

கஞ்சா வைக்கப்பட்டிருந்த பீடிகளை உடைமையில் வைத்திருந்த நாவற்குழி நபரையும் அனுமதிப் பத்திரமின்றி உடைமையில் சாராயம் வைத்திருந்த மிருசுவில் தவசிகுளம் நபரையும் தலா 200 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரிப் பொலிஸார் நாவற்குழி ஐயனார் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் கஞ்சா வைக்கப்பட்டிருந்த பீடிகளை உடைமையில் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். கொடிகாமம் பொலிஸார் அனுமதிப் பத்திரமின்றி சாராயத்தை உடைமையில் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி தவசிகுளம் நபருக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் தலா 200 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (த-9)

## சங்கடஹர சதுர்த்தி

யாழ்ப்பாணம்,ஜுலை 18

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறும். மாலை 5 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி,மூலமூர்திப் பூசை,வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருதல் இடம்பெறும் என்று ஆலய ஆதினகர்த்தா அறிவித்துள்ளார். (ஜ)

## சமய அறிவு போட்டி

யாழ்ப்பாணம்,ஜுலை 18

இலங்கையின் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. சமய அறிவை வளர்க்கும் நோக்கில் லண்டன் தமிழினிப் பத்திரிகையின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இப்போட்டியில் வயது வேறுபாடு இன்றி எவரும் கலந்து கொள்ளமுடியும். போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சமய அறிவுப் போட்டிக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் வினாத்தாள் ஆகியவற்றைப் பெற விரும்புவோர் பிரியராம் சிவம், தமிழினி தகவல் களஞ்சியம், போக்காலை வீதி, உடுப்பிட்டி,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

விடைகளைப் பூர்த்தி யாக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் மேற்படி முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

மேலதிக தகவலுக்கு thamilini.kulen@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## பொங்கல் உற்சவம்

கொடிகாமம்,ஜுலை 18

கொடிகாமம் கொயிலாமனை அருள்மிகு அண்ணமார் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அனைத்து பக்த அடியார்களையும் கலந்து அண்ணமார் பெருமானின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-159)

# கன்னியா ஆலய விவகாரம் சமாதானத்துக்கு வழிகோலாது

எச்சரிக்கிறது இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை

**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**எமது வரலாற்று இடங்களை சிங்கள பௌத்த பேரினவாத அரசு அபகரிப்பது இந்த நாட்டில் சமாதானத்தையோ நல்லிணக்கத்தையோ ஏற்படுத்தாது. மாறாகப் பிரிவினையையே தோற்றுவிக்கும். இவ்வாறு எச்சரித்துள்ளது இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை.**

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருகோணமலை கன்னியா என்பது தமிழர்களின் பூர்வீகம் என்பதற்கு பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இருப்பினும் சிங்கள பௌத்த காலனித்துவம் இராணுவ இயந்திரமும், இணைந்து திட்டமிட்ட வகையில் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. அதற்கு தொல்பொருள் திணைக்களமும் உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்றது.

இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து எமது உரிமையை நிலைநிறுத்துவதற்கு தென்கயிலை ஆதினத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட அமைதிவழியான போராட்டத்தை இராணுவத்தினரையும், பொலிஸாரையும் இயங்கு நிலையில் பெருமளவு குவித்து அச்சுறுத்தி அடக்கியதோடு, திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தின் சுவாமி சிவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயக் காணி உரிமையாளர் கோகிலரமணியையும், வழிபாட்டுக்கு பொலிஸார் தமது வாகனத்தில் அழைத்துச் சென்றபோது சிங்களக் காடையர்களால் அவர்கள் மீது எச்சில் தேனீரை ஊற்றித் தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர். இதனைப் பொலிஸார் வேடிக்கை பார்த்துள்ளனர். வெந்நீரூற்றுப் பகுதியில் கலகத்தை ஏற்படுத்தும் வகையில் சிங்களவர்களை நிறுத்தி வைத்துள்ளனர்.

எமது தமிழர் பாரம்பரியமான வரலாற்று இடங்கள், ஆலயங்கள் என்பவற்றை திட்டமிட்டு சிங்கள பேரினவாத அரசு அபகரித்து வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் ஒருபோதும் இந்த நாட்டிலே சமாதானத்தையோ இனமத நல்லிணக்கத்தையோ ஏற்படுத்தாது. மாறாக பிரிவினையையே தோற்றுவிக்கும்.

ஆதீனசுவாமிகள் மீதும் மற்றும் கோகிலரமணி அம்மன் மீதும் தேநீரால் ஊற்றி அவமதித்தமை, எமது வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டமை என்பனவற்றை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வாறான செயற்பாடுகள் தொடராது சம்மந்தபட்டவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும். தவறும்பட்சத்தில் மக்கள் போராட்டங்கள் நாடுதழுவிய ரீதியில் தொடரும் என்றுள்ளது. (ஒ.5)

## விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 18

யாழ்ப்பாணம் கைதடி நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்பள்ளி முகாமைத்துவக் குழுத்தலைவி திருமதி லோ.சிவனொளி தலைமையில் நடைபெறவுள்ள போட்டியில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், மதிப்புறு விருந்தினராக மேக்கன்ரைல் பாதுகாப்பு சேவை முகாமைத்துவப் பணிப்பாளர் வி.சுகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-159)





## கலைமகள் சனசமூக நிலையத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வலிகாமம் வடக்கு தையிட்டி கலைமகள் சனசமூக நிலையத்தை மீள சீரமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சுகிர்தன் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்த சனசமூக நிலையச் சீரமைப்புக்கு அமைச்சர் மனோகணேசன் 2 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். மூன்று அடுக்கு மாடிகளைக்கொண்டதாக இந்தச் சனசமூக நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதில் கணனி நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம், சிறுவர் முன்பள்ளி என்பன அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வுக்கு முன்பு இந்த சனசமூக நிலையம் பல்வேறு சிறப்பம்சங்களுடன் இயங்கி வந்தது. அதன் பின்னர் போர்ச் சூழ்நிலையால் இடிக்கப்பட்ட நிலையில் தற்போது மீள் சீரமைக்கப்படுகிறது.

நிகழ்வில், வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர், வலி.வடக்கு மீள்குடியேற்ற சங்கத் தலைவர், உறுப்பினர்கள், கிராம அலுவலர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

இந்தச் சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள மக்களின் காணிகளே அண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டது. (ஜ-26)

# ஆடிப்பிறப்பு விழாவும் நினைவரங்கமும் நேற்று

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஆடிப்பிறப்பு விழாவும், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் நவாலி மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றன.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் சோமசுந்தரப் புலவரின் திருவுருவச் சிலைக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் மலர்மாலை அணிவித்து ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து பாடசாலை அதிபர் கி .கிருஷ்ணானந்தா பாடசாலை நிறுவுநர் பண்டிதர் தம்பையாவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வாழ்த்துரை வழங்கினார்.

ஆடிப்பிறப்புக் குறித்த சிறப்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆற்றினார்.

உத்தராயணத்தில் இருந்து தெட்சணாயனத்தை நோக்கிய நிலைமாற்றக் காலமே ஆடிப்பிறப்பு என்ற அவர், ஆடி மாதத்தின் பெருமைகளையும் தமிழர் பண்பாட்டைப் பேணுவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.





தொடர்ந்து தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் குறித்த நினைவுப் பேருரையை சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் தமிழ்ச்சங்க உபதலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்தினார்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆக்கங்கள் குறித்த பெருமைகளை எடுத்தியம்பிய அவர் இன்றைய பாடநூல்களில் புலவரின் பாடல்கள் இடம்பெறாமை குறித்துக் கவலை வெளியிட்டார். புலவரின் பாடல்களில் உள்ள இரசனையை சபையோர் இரசிக்கும் படியாக எடுத்துரைத்தார். நிகழ்வில்வருகை தந்தோருக்கு ஆடிக் கூழ் வழங்கப்பட்டது. நிகழ்வின் நிறைவாக யாழ்ப்பாண முன்னணி இசைக்கலைஞர்கள் அருணா, கேதீசின் இசையில் இணைந்து வழங்கிய இசைச்சங்கமம் இடம்பெற்றது.

சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் மகாவித்துவான் வீரமணி ஐயரின் பாடல்கள் மற்றும் நாட்டார் பாடல்கள் நிகழ்வில் பாடப்பட்டன. இசை நிகழ்வைத் தமிழ்ச்சங்கச் செயலர் இ.சர்வேஸ்வரா தொகுத்து வழங்கினார்.

விரிவுரையாளர் வேல். நந்தகுமார் நன்றியுரை ஆற்றினார். நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர். கலந்து கொண்ட மாணவர்களுக்குக் கற்றல் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஜ-7)



## சந்நிதி ஆலய கிழக்குப்புற வீதியை அகலித்துத் தருமாறு கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 18

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய கிழக்குப்புற வீதியை நல்லூர் ஆலய வீதிபோன்று அகலித்துத் தருமாறு ஆலய நிர்வாகத்தால் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் செய்த அமைச்சர் மனோகணேசன் அங்கு சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டார். அமைச்சருடன் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனும் கலந்து கொண்டார்.

இதன்போதே குறித்த கோரிக்கை ஆலய நிர்வாகத்தால் முன்வைக்கப்பட்டது. (ஜ-26)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

வடமராட்சி, ஜூலை 18

கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. (ஜ-173)

## தொடர் சொற்பொழிவு

வடமராட்சி, ஜூலை 18

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தபுரானம் என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரம்தோறும் ஆன்மிக நிகழ்வு இடம்பெற்று வருகிறது. (ஜ-173)

# அலங்கார உற்சவம்

சாவகச்சேரி, ஜூலை 18
யாழ்ப்பாணம் மீசாலை கிழக்கு அருள்மிகு பன்றிக் கேணி கந்தசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 4ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெற்றது.

இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்குதிருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது.

உற்சவ காலக் கிரியைகள் ஆலய முதன்மைகுரு சிவசிறி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்று வருகின்றன. (ஐ-131)

***** ***** ***** ***** ***** *****

சாவகச்சேரி, ஜூலை 18
யாழ்ப்பாணம் சாவகச்சேரி டச்சு வீதி அருள்மிகு சிறி பழனி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

சிறி பழனிவேல் பவனி நேற்று புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இன்று வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளன.

உற்சவகாலக் கிரியைகள் ஆலயமுதன்மைக்குருசிவசிறி ச.பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருன்றன.(ஐ-131)

# குருநகர் யாகப்பர் ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை, ஜூலை18
யாழ்ப்பாணம், குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெறும். நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்குநடைபெறும்.மறுநாள் வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

புனிதரின் தேர்ப்பவனி எதிர்வரும் 25 ஆம் திகதி காலை இடம்பெற்று தொடர்ந்து திருச்சொரூப ஆசீரும் வழங்கப்படும் என்று பங்குத் தந்தை அருட்பணி அடிகள் தெரிவித்துள்ளார். (ஐ-135)

### ரணில் மீது நம்பிக்கை இல்லாவிட்டாலும்

# மக்களுடைய வரிப் பணத்தை அரசிடம் பெற்று அபிவிருத்தி!

### சிவமோகன் எம்.பி. தெரிவிக்கிறார்

**வவுனியா, ஜூலை 18**

**ரணில் விக்கிரமசிங்கவின் வார்த்தையில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் மக்களின் வரிப்பணத்தை அரசிடம் பெற்று அபிவிருத்தி செய்வோம் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.**

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்ட பார்வையாளர் கூடத்தைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க "தமிழர்களுக்கு இன்னும் மூன்று வருடங்களின் பின்னர் தீர்வு கிடைக்கும்" என்று கூறியிருந்தார். இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் சிவமோகனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

1948ஆம் ஆண்டிலிருந்து எத்தனையோ அரசியல் தலைவர்கள் இதே வசனத்தைப் பேசியிருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க என்ன நோக்கத்தில் அவ்வாறு கூறினார் என்று எனக்குத் தெரியாது. என்னைப்பொறுத்த வரையில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்திருக்க வேண்டுமாயின் 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தாங்களாகவே தங்களது ஆயுதங்களை மௌனித்த பின் தமிழர்களுக்கான தீர்வை நோக்கிச் சிங்கள தேசம் சென்றிருக்க வேண்டும்.

அதிலிருந்து முற்றுமுழுதாக மகிந்த ராஜபக்ச விலகிவிட்டார். அதன் பின்னர் தமிழர்களின் வாக்குகளில் அரசதலைவரான மைத்திரிபால சிறிசேனவும் தான் வழங்கிய வாக்கிலிருந்து முற்று முழுதாக விலகி விட்டார்.

**பேயா பிசாசா என்பதே தெரிவு**

அந்த அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவின் வார்த்தைகள் கூட நம்பிக்கைக்குரியவை அல்ல. எங்களை பொறுத்தவரை பேயா? பிசாசா? என்ற தீர்மானமே எங்களிடம் இருந்தது. எனவே ஒரு பிசாசு வரக்கூடாது என்றால் ஒரு பேயை ஆதரிக்க வேண்டிய தேவை இருந்ததால் இந்த அரசை ஆதரித்திருக்கிறோம். தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை அவிழ்த்துவிட்டதுடன் எமது மக்களையும் சரணடைந்தவர்களையும் படுகொலை செய்தனர். இதற்கு காரணமாக இருந்தவர்கள் அரசதலைவராக வரக்கூடாது என்பதற்காக இன்னும்பலவிடயங்களையும் இவ்வாறு செய்வோம் - என்று தெரிவித்தார். (து)

### பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கத்தின்

# திக்கம் கிளை விற்பனை நிலையம் 'கோப்சிற்றி' தரத்துடன் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
வடக்கு மாகாணத்தில் மூடப்பட்டு செயற்படாமல் இருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாகப் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் திக்கம் கிளை விற்பனை நிலையம் பரீட்சார்த்தமாக கோப்சிற்றி என்ற தரத்துக்கு மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உதவியுடன் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் அதைத் திறந்து வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவிக்கையில்,

மூடப்பட்டு செயற்படாமல் இருக்கும் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையங்கள் யாவும் நுகர்வோரைக் கவரும் வகையில் திறந்து வைக்கப்படும். இன்னும் இரண்டு கிளை நிலையங்கள் விரைவில் திறந்து வைக்கப்படும்.

மூடப்பட்டு செயற்படாமல் உள்ள கிளை நிலையங்களை மீளவும் திறந்து வைப்பதற்கு சங்கங்களின் கிளைக்குழுவினர், இயக்குநர் சபை உறுப்பினர்கள் முழுமையான ஒத்துழைப்பைவழங்க வேண்டும்.

மூடப்பட்டகிளைநிலையங்களை மீளவும் திறந்து வியாபார நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார். (து-17)



# அடிக்கல் நடும் நிகழ்வு

அளவெட்டி, ஜூலை 18
யாழ்ப்பாணம் வலி.மேற்கு சங்கானை குளத்தடி வீதியின் பேச்சி அம்மன் வீதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்.ஈ. சரவணபவன் கலந்து கொண்டு வீதிக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள்,பேச்சி அம்மன் ஆலயத்தினர்,கிராமமக்கள் எனப் பலரும் கலந்து.கொண்டனர். குறித்த வீதி நீண்டகாலமாக சீரமைக்கப்படாமையால் மக்கள் மிகவும் சிரமத்துடன் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனையடுத் து நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கிராம எழுச்சித் திட்டத்தினுடாக 10 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார்.(ஐ-63)

# கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கோம்

### வடக்கு அரச சாரதிகள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட சுகாதார சேவைகள் சாரதிகளின் இடமாற்றம் நடைமுறைக்கு வரும் வரையில் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களில் கடமையாற்றும் வடக்கு மாகாண சாரதிகள் இந்தமுறை இடமாற்றத்துக்கு விண்ணப்பிப்பதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதை வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனுக்கும் கடிதம் மூலமாக அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி நடந்த சாரதிகள் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கம் தெரிவித்தது. அந்தத் தீர்மானத்துக்கு மதிப்பளித்து சாரதிகள் செயற்படவேண்டும் என்றும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது கோரிக்கை தொடர்பாக கடந்த இரண்டு வருடங்களாக ஆளுநர், முதலமைச்சர், தலைமைச் செயலர் மற்றும் அமைச்சுக்களின் செயலர், மத்திய அமைச்சர்கள் தற்பொழுது தங்களுடன் பல சந்திப்புக்களை மேற்கொண்டு நீதியான இடமாற்றத்தினை அனைத்து வடமாகாண சபைக்கு உட்பட்ட இணைந்த சேவைகள் சாரதிகள் நீதியான இடமாற்றத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடைமுறையில் உள்ள அரச இடமாற்றக் கொள்கையைச் செயற்படுத்துமாறு பலமுறை கேட்டிருந்தோம். எனினும் உதாசீனப்படுத்தப் பட்டு வருகிறது என்று சங்கம் தெரிவித்தது.(து)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

வடமராட்சி, ஜூலை 18
பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்வி இராஜங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரின் இணைத்தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. (ஐ-173)

# வேளாங்கன்னி மாதா ஆலய திருவிழா

கொழும்புத்துறை, ஜூலை18
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை எழிலூர் அன்னை வேளாங்கன்னி ஆலயத் திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணைப் பெருவிழா நடைபெறும்.

நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருவிழா திருப்பலியும், திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறவுள்ளதாகப் பங்குத்தந்தை அருட்பணி செபஸ்ரியன் குரூஸ் அடிகள் தெரிவித்தார். (ஐ-135)

# வழிகாட்டல் கருத்தரங்கு

கொழும்புத்துறை, ஜூலை18
யாழ்ப்பாண மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தின் ஏற்பாட்டில் உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவ நாகரிகப் பாடத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி பெனற் அடிகள் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அருட்பணி ரமேஸ் அடிகள் வளவாளராகக் கலந்து கொண்டு வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கினார். இதில் 100இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். (ஐ-135)

# புனித யாகப்பர் ஆலய திருவிழா

கொழும்புத்துறை, ஜூலை 18
யாழ்ப்பாணம் பலாலி தெற்கு வயாவிளான் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெறவுள்ளன.

நற்கருணை பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி இடம்பெற்று திருச்சொரூப பவனியுடன் நிறைவுபெறவுள்ளது என்று பங்குத் தந்தை அருட்பணி சி.ஜே.ஜெயக்குமார் அடிகள் அறிவித்துள்ளார். (ஐ-135)

# மன்னாரில் 83 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது



மன்னார், ஜூலை 18

**மன்னார்மாவட்டச்செயலகத்தில் 83 பேருக்கு அரச நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நியமனக் கடிதங்களை வழங்கினார்.**

தகவல் தொழிநுட்பப் பிரிவு ஆசிரியர்களாக 9 பேர், கலாசார அலுவலர்களாக 3 பேர், அபிவிருத்தி அலுவலர்களாக 71 பேர் என நியமனங்கள் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன் றாஸ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின்செயலர் இ.இளங்கோவன், மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலர் திருமதி எஸ்.துரைராஜா மற்றும் மாகாணத் திணைக்களங்களின் செயலர்கள் இணைந்து இவற்றை வழங்கினர். (த-213)

## நியமன இடங்களுக்குச் செல்ல மறுத்தால் 7 வருடங்களுக்கு அரச வேலை கிடையாது!

*நியமனம் வழங்கி உரையாற்றுகையில் ஆளுநர் தெரிவித்தார்*

மன்னார், ஜலை 18

அரச நியமனம் பெறுபவர்கள் நியமனத்தின்போது வழங்கப்படும் இடத்துக்குச் சென்று பணியாற்ற மறுப்பார்களாயின், ஏழு வருடங்களுக்கு அவர்களுக்குவேறு ஒரு எந்த அரச வேலையும் கிடைக்காத வாறு நடவடிக்கை எடுக்கப்படும். அப்படிப்பட்ட நபர்களை நாங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கவுள்ளோம்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 77 பேருக்கு அரச நியமனம் வழங்கும் நிகழ்வு மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:





வழங்கப்பட்ட கடமையைச் செய்யுங்கள். வழங்கப்பட்ட வேலையைச் செய்யாமல் அடுத்த நாளே வந்து இடமாற்றம் கேட்பது மக்கள் விரோதமான செயலாகும். நீங்கள் பணியிடத்துக்கு ஏன் செல்லவில்லை என்பதைக் கண்டுபிடிக்க ஒரு மாத காலம் நாங்கள் காத்திருக்க வேண்டும்.

கேள்வி கேட்டு கடிதம் அனுப்பி ஒன்றரை மாதங்கள் கடந்த பின்னர்தான் குறித்த நியமனத்தை நீங்கள் எடுக்கவில்லை என்று உண்மையான காரணம் எமக்கு தெரிய வரும்.

உங்களுக்காக நேரங்கள் செலவிட்டு நேர்முகத் தேர்வு வைத்து நியமனம் வழங்கிய பின்னர் அந்த வேலைக்குச் செல்வதில்லை. அதைப்பற்றி எமக்குத் தெரியப்படுத்துவதுமில்லை. நீங்கள் ஏன் அந்த வேலைக்குச் செல்லவில்லை என்பதையும் நாங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

இத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு வடக்கில் கண்டிப்பான ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கிறேன். அரச வேலைக்கு விண்ணப்பம் செய்து தேர்ச்சி பெற்று நியமனம் பெற்ற எவரும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களுக்காக அந்த நியமனத்தை எடுக்காமல் இருந்தால் இனிமேல் ஏழு வருடங்களுக்கு அவர்களுக்கு வேறு எந்தவொரு அரச வேலையும் கிடைக்காமல் செய்யப்படும். அப்படிப்பட்ட நபர்களை நாங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கவுள்ளோம்.

நியமனம் பெற்றதிலிருந்து ஒரு வருடமாவது நியமனம் எடுத்த இடத்துக்குப் போக மாட்டேன் என்றோ தங்களுக்குத்தேவையான இடத்துக்கு மட்டுமே போவேன் என்றோ அடம் பிடிக்கும் ஏராளமான சம்பவங்களைக் காணக்கூடியதாக உள்ளது. அப்படி எதுவும் நடக்கும் என்றால் வெளி மாவட்டங்களிலிருந்து அலுவலர்கள் இங்கு வந்து அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான அதிகாரங்களும் உரிமையும் என்னிடம் உண்டு.

மக்கள்சேவைதான் முக்கியம். ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களைக் கூறி நியமன இடத்துக்குச் செல்லாமல் இருக்காதீர்கள். அரச பணிக்கு வரும்போதே எந்தெந்த இடத்தில் அரச ஊழியம் தேவையாக உள்ளதோ அங்கு சென்று கடடையாற்றுவேன் என்று கையொப்பம் இட்டுத்தான் வருகிறீர்கள். நீங்கள் மட்டுமல்ல நீதிவான்கள், பொலிஸ் அலுவலர்கள்கூட போக வேண்டும். நியமனம் தரும் இடத்துக்குச் செல்ல இயலாது என்பவர்கள் இப்போதே கூறி விடுங்கள். உடனடியாக உங்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்து விடுகிறேன் என்று அரச நியமனம் பெற்றவர்கள் முன்பாக ஆளுநர் தெரிவித்தார். இதுதவிர, சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஆசிரிய நியமனங்களும் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் வழங்கப்பட்ட பணியிடங்களுக்குச் சென்று பொறுப்பெடுக்காதவர்களின் விவரங்களை ஆளுநர் அதிகாரிகளிடம் கோரியிருந்தார். (த-213,56)

## நீரியல்வளத் திணைக்களத்திலிருந்து மீனவர் நால்வர் தப்பியோடிவிட்டனர்

*முல்லை நீதிமன்று பிடியாணை பிறப்பிப்பு*

முல்லைத்தீவு, ஜூலை 18

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்தனரென்று கடற்படையினர் நான்கு மீனவர்களைக் கைது செய்து நீரியல்வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்திருந்தனர். எனினும், திணைக்களத்திலிருந்து அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். அவர்கள் சென்ற பின்னர் திணைக்களத்தினர்நீதிமன்றில்வழக்குத்தொடர்ந்துள்ளனர். அவர்களைக் கைது செய்ய நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது.

கொக்கிளாய் கடற்பரப்பில் கடந்த திங்கட்கிழமை தடை செய்யப்பட்ட முறையில் புல்மோட்டையைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டி நால்வரையும் அவர்களின் படகுடன் கடற்படையினர் கைதுசெய்து முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திடம் ஒப்படைத்திருந்தனர்.

எனினும் திணைக்களத்திலிருந்து குறித்த மீனவர்கள் நால்வரும் தலைமறைவாகிவிட்டனர். அதன் பின்னர் திணைக்களத்தினர் தப்பியோடிய மீனவர்கள் மீது முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்தனர். நான்கு மீனவர்களும் அன்றையதினம் மன்றுக்கு வராததால் அவர்களுக்கு எதிராக நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-ரி3)

## மாத்தளன் மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் ஆராய்வு

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு மாத்தளன் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தலைமையிலான குழுவினர் ஆராய்ந்துள்ளார்கள்.

புதுமாத்தளன் மீனவர் சங்கக் கட்டடத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் எட்டுக் கிராமங்களைச் சேர்ந்த மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு நவீனமுறையிலான மீன்பிடித் தொழிலுக்கு கடற்றொழில் நீரி யல்வளத் துறைத் திணைக்களம் அனுமதி மறுத்துள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் கடந்த 2ஆம் திகதி மனிதஉரிமை ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதன்படி மனித உரிமை அதிகாரிகள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்தனர்.

இது தொடர்பில் மாத்தளன் பிரதேச மீனவர்கள் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் எமக்கு அனுமதி மறுக்கப்படுவதற்கு காரணகர்த்தாக்கள் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனும் அதற்குப் பின்னால் இருக்கும் கூட்டமைப்பின் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களுமே.

நாடு முழுவதும் அனுமதி வழங்கிவிட்டு குறிப்பிட்ட ஓர் இடத்துக்கு மட்டும் அனுமதி மறுக்கப்படுவதில் அரசியல் நோக்கம் இருக்கின்றதை என்று சந்தேகிக்க வைக்கிறது.

முல்லைத்தீவுக் கடலில் நாங்கள் தொழில் செய்யமுடியாதுள்ளது. ஆனால் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து தொழில் செய்கின்றார்கள்.

தென்பகுதி மற்றும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் வந்து கடலில் தடைசெய்யப்பட்ட தொழிலைச் செய்து வருகின்றார்கள். ஆனால் இலங்கையில் அனுமதிக்கப்பட்ட தொழிலைச் செய்யமுடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். இதற்கான அனுமதியை கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் மறுத்து வருகின்றது. தொடர்ச்சியாக இவ்வாறான நிலையால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

எங்கள் கடலில் உள்ள வளங்களை நாங்கள் எடுக்க முடியவில்லை. ஆனால் வெளி மாவட்டத்தவர்கள் எடுக்கின்றார்கள். முல்லைத்தீவு சாலைப் பகுதியில் 400 நல்ல முடிவு கிடைக்கும் என்று நம்புகின்றோம் என்று தெரிவித்தனர். (த-ரி3)

## முன்பள்ளிக்கு மின் வழங்க ரூ.15,000 அன்பளிப்பு

வவுனியா, ஜூலை 18

வவுனியா கூமாங்குளம் சித்திவிநாயகர் முன்பள்ளிக்கு மின் இணைப்புச் செய்ய, புளொட் அமைப்பின் வவுனியா தெற்கு தமிழ்ப்பிரதேசசபை உறுப்பினர் கா.நந்தகுமார் ஆடி மாதத்துக்கான கொடுப்பனவான 15 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார். 30ஆவது வீர மக்கள் தினத்தையொட்டி அவர் அதனை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## முன்பள்ளிக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

வவுனியா, ஜூலை 18

வவுனியா கூமாங்குளம் சித்திவிநாயகர் முன்பள்ளிச் சிறார்களுக்கு நேற்றுத் தளபாடங்கள் வழங்கப்பட்டன. புளொட் அமைப்பின் 30ஆவது வீர மக்கள் தினத்தையொட்டி அந்த அமைப்பால் இவை வழங்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியர் நகர சபை உறுப்பினர்களான ச.மோகன், சு.காண்டீபன், பிரதேச சபை உறுப்பினர்களான த.யோகராஜா, கா.நந்தகுமார், தோழர்களான ராஜன், சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (த)




### சாவகச்சேரியில் கஞ்சா பரிமாற்றம்

# வவுனியா பொலிஸ் அலுவலரும் வர்த்தகரின் சகோதரரும் கைது

வவுனியா, ஜூலை 18

கஞ்சா போதைப் பொருள் பரிமாறினர் என்ற குற்றச்சாட்டில் சிங்கள பொலிஸ் அலுவலரும் சாவகச்சேரியில் முஸ்லிம் ஹோட்டல் நடத்தும் அதன் உரிமையாளரின் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தென்மராட்சி சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.



கைது செய்யப்பட்ட இருவரும் வவுனியா ஈரப்பெரிய குளம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொகவந்தலாவவையைச் சேர்ந்த சிங்களப் பொலிஸ் அலுவலர் மற்றும் சாவகச்சேரியில் உணவகம் நடத்தும் சகோதர இனத்தவரின் சகோதரர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வாகனத்தில் சுற்றுலா சென்ற பொலிஸ் அலுவலர் சாவகச்சேரியில் கடை ஒன்றில் வைத்து 4 கிலோ 400 கிராம் கஞ்சா போதைப் பொருளைப் பெற்றுக்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதனை வழங்கினார் என்று மற்றையவர் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கஞ்சா போதைப் பொருள் கைமாற்றப்பட்டதை அவதானித்த கடையிலிருந்த சிலர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். அங்கு விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். பின்னர் விசாரணை செய்தபோதே அவர்கள் யார் என்பது தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் அலுவலர் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியிலுள்ள முஸ்லிம் ஹோட்டல் உரிமையாளரின் சகோதரன், தனக்கு சுகவீனம் என்று கூறுகிறார். அதனால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரை மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு பதில்நீதிவான் உத்தரவிட்டார். (த-9)



# வவுனியாவில் சிறப்புற்ற முழு நிலாக் கலைவிழா

வவுனியா, ஜூலை 18

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு கல்வி வலயம் நடத்தும் முழு நிலாக் கலை விழா சேமமடு சண்முகானந்தா மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.



வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், பிரதேச சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் நடனம், பாடல்கள், நாட்டுக்கூத்து போன்ற பாரம்பரிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. விருந்தினர்கள் மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கினர். (த)

## கிராமத்துக்குள் புகுந்த யானை இரு மாணவிகளைத் தாக்கியது

*பயிர்களையும் உணவாக்கி நாசமாக்கியது*

கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானை தாக்கியதில் மாணவிகள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். பயிர்களையும் யானை உணவாக்கி, நாசமாக்கிச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் மட்டக்களப்பு தும்பங்கேணி இளைஞர் விவசாயத்திட்டக் கிராத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலைக்குச் செல்வதற்காக குளிக்கச் சென்ற மாணவி களை காட்டு யானை தாக்கியுள்ளது. 3 ஆம் தரத்தில் கல்வி கற்கும் சந்திரகுமார் கிசாணி, 9ஆம் தரத்தில் கல்வி கற்கும் கோபாலபிள்ளை ஜெயனுஜா ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இருவரும் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். மற்றைய மாணவி சிகிச்சை பெற்று வீடுதிரும்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கிராமத்தினுள் புகுந்த காட்டுயானையை கிராமத்தைவிட்டு வெளியேற்றமுடியாமல் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டுள்ளனர். பின்னர் கிராமத்திலுள்ளவர்கள், கிராமத் தலைவர்கள் ஒன்றுகூடி தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசு மற்றும் யானைவெடி கொழுத்தியும் யானையை வெளியேற்றியுள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள பற்றைக் காடுகளுக்குள் பகலில் தங்கிநிற்கும் காட்டுயானைகள் இரவில் கிராமங்களினுள் உட்புகுந்து இவ்வாறான அழிவுகளை ஏற்படுத்திவிட்டு செல்கின்றன. இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் காலத்துக்குக் காலம் அவ்வப்போது சிற்சில நடவடிக்கைகள் எடுத்தாலும் அவை வெற்றியளிக்கவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (த-46)

## வவு. விபத்தில் நால்வர் காயம்

வவுனியா, ஜூலை 18

வவுனியா வைரவபுளியங்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயம் அடைந்துள்ளனர். வவுனியா, வைரவபுளியங்குளம், தொடருந்து வீதியில் மூன்று உந்துருளிகள் மோதியதில் நால்வர் படுகாயமடைந்தனர். அவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் இருவர் மாணவிகள். வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். (த)

# பண்ணைகளைப் பதிவது அவசியம் தவறின் அரசுடமையாக்கப்படலாம்

*கால்நடை சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்து*

தலைமன்னார், ஜூலை 18

கால்நடைப் பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைப் பண்ணைகளைப் பதிவு செய்யாவிடில் எந்தக் கால்நடையும் சட்டப்படி அரசுடமை ஆக்கப்படலாம் என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. கால்நடைப் பண்ணையாளர்களுக்கு வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் விடுத்திருக்கும் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறியதோ பெரியதோ எந்தவொரு பண்ணையையும் திணைக்களத்தில் பதிவு மேற்கொள்ளாது நடத்துவது சட்டப்படி குற்றமாகும். காதடையாளமிடாத எந்த ஒரு கால்நடையையும் சட்டப்படி கால்நடை வளர்ப்போர் உரிமை கோர முடியாது என்பதுடன் காதடையாளம் இடப்படாத எந்த ஒரு கால்நடையும் சட்டப்படி அரசுடமை ஆக்கப்படலாம்.

எனவே பதிவு செய்யப்படாத பண்ணைகளை உடன் பதிவு செய்யுமாறும் காதடையாளம் இடப்படாத விலங்குகளுக்குக் காதடையாளம் இட்டுக்கொள்ளும்படியும் அதற்கு அருகில் உள்ள அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்தை நாடுங்கள் என்றும் திணைக்களம் கால்நடை வளர்ப்போருக்கு அறிவுறுத்தியுள்ளது. (த-60)



தொடருந்துக் கடவையில்

## காயமடைந்த முதியவரை இனங்காண கோரிக்கை

வவுனியா, ஜூலை 18

வவுனியாவில் தொடருந்துக் கடவையில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகிறார். தொடருந்து மோதியிருக்கலாம் என்று நம்பப்படும் அவரை அடையாளங்காணுமாறு மருத்துவமனை நிர்வாகம் கோரியுள்ளது.

60தொடக்கம் 65வயது மதிக்கத்தக்கவரே மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.

வவுனியா ஈரப்பெரியகுளம் தொடருந்துக் கடவைப்பகுதியில் படுகாயமடைந்து சுய நினைவற்ற நிலையில் காணப்பட்ட அவரை வீதியால் சென்றோர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்திருந்தனர்.

அவர் பற்றிய தகவல்கள் எவையும் தெரியவில்லை என்றும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (த)

## கரைதுறைப்பற்று இணக்க சபை நாளைமறுதினம் கூடவுள்ளது

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட இணக்கசபையின் மாதாந்த அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக வழக்காளர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும், நாளைமறுதினம் சனிக்கிழமை அமர்வு நடைபெறவுள்ளதாக இணக்க சபையின் தவிசாளர் மு. உதயசங்கர் தெரிவித்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட மக்களின் பிணக்குகளைத் தீர்க்கும் முகமாக இணக்க சபையின் செயற்பாடுகள் மாதம் தோறும் நடைபெற்று வருகின்றன. கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட மக்களின் பிரச்சினைகள் இதன்மூலமாகத் தீர்க்கப்பட்டு வருவதாகவும் தவிசாளர் தெரிவித்துள்ளார். (த-ரி3)

# ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் இலங்கைக்கு இன்று வருகை

கொழும்பு, ஜூலை 18

அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட் சோசி வூல் ஒன்பது நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு இன்று வரவுள்ளார்.

அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காகவே அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

கொழும்பிலும், வடக்கு, கிழக்கு மற்றும் தென்பகுதிக்கும் அவர் பயணங்களை மேற்கொண்டு, மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளார்.

அரச உயர்மட்ட அதிகாரிகளையும், நீதித்துறை, ஊடகத்துறை, சிவில் சமூக குழுக்களையும், மனித உரிமை ஆணைக்குழுவையும் சந்தித்து பேசவுள்ளார். இவர் தனது பயணம் தொடர்பான விரிவான அறிக்கையை அடுத்த ஆண்டு ஜூன் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## வீதிக்கு வந்தது கடல் நீர் போக்குவரத்துக்குப் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 18



அம்பலாங்கொட, கஹவ பகுதியில் இருந்து கொடகம வரையிலான கடற் கரை பகுதியில் கடல் நீர் வீதிக்கு வந்ததால் போக்கு வரத்துக்குத் தடை ஏற்பட்டுள்ளது. காலி கொழும்பு பிரதான வீதியில் கல் மற்றும் மண் குவிந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.


பலத்த கடல் அலையின் காரணமாக இவ்வாறு கடல் நீர் வீதிக்கு வந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் இந்த இடத்தில் கடல் நீர் வீதிக்கு வருகின்றது என்றும், இதுவரையில் அது தொடர்பாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (எ)

## கூட்டமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி சுயலாபம்தேட முனைகிறாரா விஜயகலா?

யாழ்ப்பாணம், ஜூலை 18

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் கொண்டுவரப்பட்ட திட்டத்தை, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனே கொண்டுவந்தார் என்று பொது வெளியில் பொய்யான தகவலை வெளியிட்டார் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா. அவருடைய் இந்தக் கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வ்ன்மையாகக் கண்டித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கேட்போர் கூடம் அமைப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அரும்பாடுபட்டு, பல இடங்களில் பேச்சுக்கள் நடத்தி இறுதியாக 55 மில்லியன் ரூபா நிதி கேட்போர் கூடத்துக்காக மறுவாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Ministry of National Policies, Economic Affairs, Resettlement & Rehabilitation, Northern Province Development and Youth Affairs

Office for Resettlement, Rehabilitation and Northern Province Development
No. 1968, Galle Road, Colombo - 03

MRRND/04/20/01

02.07.2019

District Secretary
District Secretariat
Jaffna

Request received from Hon E.Saravanapavan M.P Jaffna District

This has reference to the letters received from Hon E.Saravanapavan M.P. Copy of the letters is attached.

1 Development Programme
2 Construction of Kokuvil Market Up floor
3 Construction of Auditorium – Skandavarodaya College

Therefore, you are kindly requested to submit a Project Proposal with feasibility and your recommendation on this matter please.

P.Senthilnanthanan
Additional Secretary - Development
For Secretary

Copy to :- Hon E. Saravanapavan M.P – for your kind information please .

Addl.Secretary (Admin)
Addl.Secretary (Development)
General Office

மேற்படி நிதி எப்படி ஒதுக்கப்பட்டது என்பது பற்றியும் அதற்கு தான் பட்ட கஸ்ரங்கள் தொடர்பிலும், சரவணபவன் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பாடசாலைச் சமூகத்தினருக்கு வெளிப்படுத்தியிருந்தார். வடக்கு மாகாணத்துக்கு அபிவிருத்திகளைக் கொண்டுவரும் போதும்," அதற்காக முயற்சிக்கும் போதும் தமிழராக இருந்துகொண்டு அரசுடன் இணைந்து அவர்களுக்காக வேலை செய்பவர்கள் அதனைக் குழப்புகின்றனர் என்று அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிடைக்கப்பட்ட கேட்போர் கூடத்துக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த திங்கட் கிழமை அடிக்கல் நட்டு வைத்தார். அதைத் தொடர்ந்து இடம்பெற்ற பாடசாலயின் பரிசளிப்பு விழாவிலும் அவர் கலந்து கொண்டிருந்தார். அவருடன் அமைச்சர் விஜயகலாவும் நிகழ்வில் கலந்துகொண்டார். நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் விஜயகலா கல்லூரியின் கேட்போர் கூடம் அமைப்பதற்கான நிதியை ஒதுக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் முழு முயற்சி எடுத்தார் என்றும், அவரால் தான் அந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் விஜயகலா திட்டமிட்டே இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்துள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டுக்கு காரணமாக அமைந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனே என்பதை தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மறுவாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கடிதம் உறுதிப்படுத்தியுள்ளது. கூட்டமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி அதன்மூலம் சுயலாபம் தேடுவதற்கு அமைச்சர் விஜயகலா முயற்சிக்கிறார் என்ற கருத்துக்கள் இந்தச் செயற்பாட்டின் மூலமாக இணையத் தளங்களில் பேசப்பட்டு வந்தது. பலரும் அந்தத் தகவல்களைப் பகிர்ந்துகொண்டிருந்தனர்.

## கட்டுநாயக்காவில் மற்றொரு அமெரிக்க சரக்கு வானூர்தி

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தரையிறங்கிய மற்றொரு அமெரிக்க சரக்கு வானூர்தி நேற்று முன்தினம் அதிகாலை புறப்பட்டுச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'வெஸ்ரேன் குளோப் எயர் லைன்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான வானூர்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.50 மணியளவில் கட்டுநாயக்கபன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியது. இந்த சரக்கு வானூர்தி, ஐக்கிய அரபு 'எமிரேட்சில்' உள்ள புஜாரா வானூர்தி நிலையம் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளது.

கடந்தவாரமும், வெஸ்ரேன் குளோப் எயர்லைன்ஸ் நிறுவனத்து க்குச் சொந்தமான வானூர்தி ஒன்று கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியிருந்தது. அந்த வானூர்தி எரிபொருள் தேவை மற்றும் விநியோக சேவைகளை பெற்றுக் கொள்வதற்காகவே கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியதாக அரசு கூறியிருந்தது. எனினும், 'அக்சா' உடன்பாட்டுக்கு அமைய, இலங்கையை அமெரிக்கா விநியோகத் தளமாக பயன்படுத்த ஆரம்பித்திருப்பதாக சந்தேகங்கள் கிளம்பியுள்ளன. (ஒ.5)

## மக்கள் ஆதரவு உள்ளவரை வேட்பாளராக்க வேண்டும்

### ஐக்கிய தேசியக் கட்சியிடம் அமைச்சர் ஹரின் கோரிக்கை

பொதுமக்களின் ஆதரவு இருக்கும் ஒரு தலைவரையே அடுத்த அரச தலைவர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியிடம் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டை வழிநடத்த ஒரு இளம் அரசியல்வாதியே வேண்டும். தற்போது பொது மக்கள் அரசியல்வாதிகளிடமிருந்து விலகி வருகிறார்கள். இந்த நிலையில் நாட்டு மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை கொண்டுவர சஜித் பிரேமதாச வல்லவர். 52 வயதான அரசியல்வாதியை அடுத்த அரச தலைவர் வேட்பாளராக முன்வைப்பதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கையூட்ட முடியும்.

பலரால் பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர் மீது முன்வைக்கப்பட்டபோதும், கிராமப்புற மக்கள் சஜித்பிரேமதாசவையே விரும்புகின்றனர். கூட்டு அரசை அமைப்பதன் மூலம் ஐக்கிய தேசிய கட்சி பாதிக்கப்பட்டுள்ளது. அவர் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளுடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டிய நேரம் இதுவாகும் - என்றார். (எ)

## கண்டிக் கதிர்காம கந்தனுக்கு மாணிக்க கங்கையில் தீர்த்தம்

கொழும்பு, ஜூலை 18

வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தனுடைய ஆடித் திருவிழாவின் தீர்த்தோற்சவம் மாணிக்க கங்கையில் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. அதில் பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர்.

கதிர்காமக் கந்தன் ஆடித் திருவிழா கடந்த 3ஆம் திகதி பஸ்நாயக்க நிலமே தில்ருவான் ராஜபக்ஸ தலைமையில் ஆரம்பமாகி 14 நாள்கள் ஆலய வளாகத்தில் கலை கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கக் கூடிய ஊர்வலங்களும் நடைபெற்றன.

நாட்டின் பலபாகங்களிலிருந்தும் பெருந்திரளான அடியார்கள் கலந்துகொண்டிருந்தனர். (த)

## போராட்டத்தை உடனே கைவிடுமாறு தபால்துறை அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 18

தபால் ஊழியர்களின் சுற்றறிக்கையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு அமைச்சரவையில் கலந்தாலோசித்து நிரந்தரத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். எனவே வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள், போராட்டத்தை கைவிட்டு பணிக்குத் திரும்பவேண்டும். இவ்வாறு முஸ்லிம் சமய கலாசார மற்றும் தபால் துறை அமைச்சர் ஏ.ஹலீம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தபால்திணைக்கள ஊழியர்கள் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியுடன் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர். இந்த வேலை நிறுத்தம் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஆள்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களை முன் வைத்து முன்னெடுக்கப்படுகின்றது. அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்டது. இது சம்பந்தமாக அமைச்சர்கள் குழுக்கள் நியமிக்கப்பட்டு கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. 6/2006 சுற்றறிக்கையில் ஏற்பட்ட சில பிரச்சினை காரணமாகவே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

இருந்த போதிலும் பல மட்டங்களில் கலந்தாலோசித்து இறுதி முடிவுகள் எடுக்கும் தருணத்தில் இது சம்மந்தமாக திரும்பவும் அமைச்சர்களின் கவனத்தில் கொண்டு வருவதற்காக நாளை வெள்ளிக்கிழமை அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் பேசி தீர்வைப் பெற்றுக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன். வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டு, வழக்கம் போல சேவையைத் தொடருமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ஒ.5)

## சீன எண்ணெய் நிறுவனம் இலங்கையில் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

சினோபெக் எனப்படும் சீனாவின் பெற்றோலிய மற்றும் இரசாயனவியல் நிறுவனம், இலங்கையில் எரிபொருள் நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

பிரதான கடல்வழிப் பாதையில் செல்லும் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகங்களை மேற்கொள்ளும் வகையில், இந்த எண்ணெய் நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளதாக சினோபெக் தெரிவித்துள்ளது. அம்பாந்தோட்டையில் இந்த நிறுவனம் செயற்படவுள்ளது.

இந்த நிறுவனத்தால் கப்பல்கள் மற்றும் மின்உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது. (ஒ.5)

# 120 நாள்களில் தேர்தல்

## ஐ.தே.க. சார்பில் பலம் மிக்க வேட்பாளர்

### அமைச்சர் நவீன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

அடுத்த 120 நாள்களில் அரச தலைவர் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. அதில் ஐ.தே.க சார்பாக பலமான வேட்பாளர் ஒருவரை நிறுத்தவுள்ளோம்.

இவ்வாறு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் இலத்திரனியல் தேசிய அடை யாள அட்டை வழங்கும் அலு வலகமொன்று நுவரெலியா - ஹாவாஎலிய பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது. இந்த அலுவலகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பெருந்தோட்டத் துறை அமைச்சர் நவீன் திசாநா யக்க தலைமையில் இடம்பெற்றுள்ளது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கட்சி விடயங்களை தேர்தல் காலங்களில் மாத்திரம் பார்த்துக் கொள்ளலாம். இன்னும் 120 நாள்களில் அரச தலைவர் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. அதில் ஐ.தே.க சார்பில் பலமான வேட்பாளர் ஒருவரை நிறுத்தவுள்ளோம். அவ்வாறான ஆளுமை மிக்கவர்கள் எமது கட்சியில் உள்ளனர். தற்போது நாட்டில் காணப்படும் பெரும் பிரச்சினை வேலையில்லாப் பிரச்சினை யாகும். இதற்குத் தீர்வு காண வேண்டியது கட்டாயமாகும். மக்களின் துன்பத்தை அறிந்து நாம் செயற்பட வேண்டும். இதற்கு அனைத்து வகையான பேதங்களையும் மறந்து பயணிக்க வேண்டும். அவ்வாறு பயணித்தாலே 21ம் நூற்றாண்டில் சிறந்த ஒரு நாடாக இலங்கையை மாற்ற முடியும். என்றார். (எ)

# மகிந்த அரசின் செயற்பாட்டை சகிக்காதே வெளியேறினோம்!

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

கடந்த அரசின் செயற்பாடுகளால் வெட்கமும், அதிருப்தியும் அடைந்தமையாலேயே நாம் அங்கிருந்து வெளி யேறினோம். அவ்வாறு வெளியேறியதன் மூலம் தலையை கருங்கல்லில் அடித்துக் கொண்டோம் என்று சிலர் கூறினர். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியின் கீழ் நுவரெலியா மருத்துவமனையில் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரை யாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது திறக்கப்பட்ட இந்த மருத்துவமனையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும், அதனால் அதைத் திறக்க அனுமதிக்கப்போவதில்லை எனவும் மருத்துவர்கள் சிலர் கூறினர். அதன் காரணமாகவே மருத்துவமனையைத் திறக்க காலதாமதம் ஆனது. மாறாக எனது தனிப்பட்ட தாமதம் இதற்கு காரணம் அல்ல.

அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை சகல நவீன வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த பிரதேச மக்கள் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்ள முடியும். நவீன் திஸாநயக்கவின் தந்தை இந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் மிகப் பெரிய பங்களிப்பு செய்தார். நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய ஆளுமை அவரிடம் காணப்பட்டது. அது பிறப்பிலிருந்தே அவருக்கு கிடைத்திருந்தது.

நாட்டை கட்டியெழுப்ப் கூடிய எதிர்கால சிந்தனை மிக்க ஒரு அரசியல் தலைவராவார். போர் காரணமாக அவர் உயிரிழந்தார். வடக்கு மற்றும் தெற்கில் இருந்த பயங்கரவாதிகள் அவ்வாறான அரசியல் சிந்தனைமிக்கவர்களை இல்லாதொழித்தனர் - என்றார். (எ)

# விபத்துக்களில் சிக்கி யானைகள் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 18

ஹபரண மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

ஹபரண - கந்தளாய் பிரதான வீதியில் வாகனங்களில் மோதுண்டு யானையொன்று உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு யானை காயமடைந்துள்ளது. விபத்துடன் தொடர்புடைய ஒரு வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றொரு காட்டு யானையை விபத்துக்குள்ளாக்கிவிட்டு தலைமறைவாகிய மற்றுமொரு வாகனத்தின் சாரதியைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸ்ார் முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, ஹம்பாந்தோட்டை - கொன்னருவ மல்லார விவசாயக் காணியொன்றிலிருந்து யானையொன்றின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கு அமைய விசார்ணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யானையின் உயிரிழப்பிற்கான காரணம் தொடர்பில் கண்டறிவதற்கு சம்பவ இடத்திற்கு குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது என்று ஹம்பாந்தோட்டை வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தம்புள்ளை பகுதியில் வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் வெடிபொருளை உட்கொண்டதில் யானையொன்று உயிரிழந்துள்ளது. (எ)

# மக்கள் புறக்கணித்தால் ஒதுங்கி விடுவதே சிறப்பு

### அரசியல்வாதிகளுக்கு சஜித் அறிவுரை



கொழும்பு, ஜூலை 17

மக்கள் புறக்கணிக்கும் பட்சத்தில், மக்கள் பிரதிநிதிகள் அரசியலில் இருந்து ஒதுங்கத் தயாராகவே இருக்க வேண்டும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனநாயக ரீதியாக நாம் அனைவரும் மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும். மக்கள் எம்மை புறக்கணித்தால் நாம் அரசியலில் இருந்து நிச்சயமாக வெளியேறத் தயாராகவே இருக்க வேண்டும்.

மக்கள் எமக்கு ஆட்சியமைக்கும் தகுதி உள்ளது என்று நினைத்தால் நாம் அரசியலில் தொடர வேண்டும். இங்கு மக்களின் ஆணையே முக்கியமான ஒன்றாக இருக்கிறது. மக்களின் ஆணையையும் மக்களின் எதிர்பார்ப்பையும் புறக்கணித்துவிட்டு, குடும்ப ஆதிக்கத்துக்குள் எடுக்கப்படும் எந்தவொரு முடிவையும் மக்கள் என்றும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. நாமும் இதற்கு என்றும் அனு மதிக்கப்போவதில்லை.

நாம் இந்த இடத்துக்கு, மக்களின் ஆணைக்கு இணங்கவே வந்துள்ளோம். எனவே, நான் இந்த இடத்தில் ஒரு வாக்குறுதியை வழங்குகிறேன்.

இந்தமுறை எவருக்கும் அரசியல் விளையாட் டில் ஈடுபட நாம் அனுமதிக்கப்போவதில்லை. மக்களுக்கே முழுமையான அதிகாரம் கிடைக்கும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்றார்.

அதேவேளை, எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளிக்கிளம்பியுள்ளன. கட்சியில் ஒரு சாரர் சஜித் பிரேமதாச வேட்பாளராகக் களமிறக்கப்பட வேண்டும் என்று கூறி வருகின்றனர். ஒரு சாரார் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிடுகின்றனர். (எ)

# ஹெரோய்ன் பாவனை: 4 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஹெரோய்ன் பயன்படுத்திய குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களிடம் இருந்து சுமார் 20 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 22 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் அவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-106)

# முஸ்லிம் விவாகச் சட்டத்தில் மாற்றம் வரவேற்கத்தக்கது

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

முஸ்லிம் விவாக - விவாகரத்து சட்டத்தில் திருத் தங்களை மேற்கொள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களே பரிந்துரைகளை முன்வைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணி கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச நிறுவனங்களில் மத ரீதியில் முஸ்லிம் பெண்களுக்கு மாத்திரம் அவர்களது கணவர் இறந்துவிட்டால் குறிப்பிட்டதொரு காலத்துக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்கப்படும் சட்டம் இருக்கின்றது.

கணவர் இறந்தால் அவர்கள் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகள் கவலைகள் தீரும்வகையில் அவர்களுக்கு இந்த விடுமுறை வழங்கப்படுகின்றது. ஆனால் ஏனைய மதப் பெண்களுக்கு இந்தச் சலுகை இல்லை. அதனால் அனைத்துப் பெண்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதே முறையாகும். - என்றார். (எ)

# பொருளாதார வளர்ச்சி போதுமானதாக இல்லை

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

நாட்டின் பொருளாதாரம் நிலையாக உள்ளபோதும், பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் சுற்றுலாத்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட துறைகளை மீண்டெடுக்கும் செயற்றிட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. பாதிப்புக்கள் இல்லை என்று மறுக்க முடியாது. ஆனால் அவற்றில் இருந்து விரைவாக மீண்டு வருகின்றோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திஜித் குமாரசுவாமி.

நாணயச் சபையின் 4ஆவது மீளாய்வுக் கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து, சுற்றுலாத் துறையிலும் அதனுடன் தொடர்புடைய துறை களிலும் ஏற்பட்ட தாக்கம் அண்மைய காலத்தில் பொருளாதாரத்தைப் பாதிப்பதாக அமைந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை நிலையாக உள்ள போதும், பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் இல்லாமை தான் பிரச்சினையாக உள்ளது - என்றார். (எ-31)

# அளவு கடந்த பொறுமையும் ஆபத்தையே ஏற்படுத்தும்

## இணைந்து செயற்பட வர வேண்டுமென கூட்டமைப்புக்கு வேலுகுமார் அழைப்பு

கொழும்பு, ஜூலை 18

அரசியலில் பொறுமையும், நிதானமும் அவசியமே. ஆனால் அளவு கடந்த பொறுமையும், மித மிஞ்சிய நிதானமும் ஆபத்தையே ஏற்படுத்தும். இதை உணர்ந்து ஓர் அணியாகச் செயற்பட கூட்டமைப்பு முன்வரவேண்டும்.



ஆளுந்தரப்பில் தமிழ் மக்கள் சார்பில் பலமானதொரு அரசியல் கூட்டணியாகத் திகழும் தமிழ் முற்போக்குக் கூட்டணி யும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் தமிழ் மக்களுக்காகக் குரல் எழுப்பி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட்டால் தமிழர்களுக்கான - தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகளை இலகுவில் வென்றெடுக்கக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாய்க மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசனுடன் இணைந்து வவுனியாவுக்கு களப்பயணம் மேற்கொண்டிருந்த அவர் அங்கு நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒற்றுமையே பலம் என்பதை தமிழ் முற்போக்கு கூட்டணி கடந்த நான்கு ஆண்டு காலப் பகுதிக்குள் நிரூபித்துக் காட்டியுள்ளது. அபிவிருத்தி மற்றும் அரசியல் உரிமைகளை சமாந்தரமாக வென்றெடுத்துவருகின்றோம்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டபிறகு 'ஒற்றுமையே' எமக்கு எஞ்சியுள்ள இறுதி ஆயுதமாகும். அதனை உரிய வகையில் பயன்படுத்தினால் நாளை நமதாகும். இதை உணர்ந்ததால்தான் கடந்தகாலங்களில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடனும் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு அரசியல் பயணத்தை தொடர எமது தரப்பு பல தடவைகள் முயற்சித்தது. ஆனால், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிடமிருந்து சாதகமான பதில்கள் - சமிக்ஞைகள் கிடைக்கவில்லை.

இதனால் அவர்களை, அவர்களுக்கே உரிய பாதையில் பயணிக்க இடமளித்தோம். ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியல் அணுகுமுறை இன்று தோல்விகண்டுள்ளது. தமிழ் மக்கள் மத்தியிலேயே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இனியாவது ஆளுந்தரப்பில் வலுவான கூட்டணியாக விளங்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு பயணிக்க கூட்டமைப்பு முயற்சிக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் அதோ கதிதான். பன்னாடுகளை முழுமையாக நம்புவதற்கு முன்னர் நாம் பலமாக இருக்கவேண்டும். எமக்கான பேரம் பேசும் சக்தி வலுவடையவேண்டும்.

அரசியலில் பொறுமையும், நிதானமும் அவசியமே. ஆனால் அளவு கடந்த பொறுமையும், மித மிஞ்சிய நிதானமும் ஆபத்தையே ஏற்படுத்தும். இதை உணர்ந்து ஓர் அணியாகச் செயற்பட கூட்டமைப்பு முன்வர வேண்டும் - என்றார். (எ)

# வெளிச் சக்திகள் தொடர்பாக இலங்கைக்கு சீனா அறிவுரை

கொழும்பு, ஜூலை 18

வெளிச் சக்திகளின் தலையீடுகள்தொடர்பாக இலங்கை எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷி யுவான் எச்சரித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

சீனா, இலங்கை போன்ற நாடுகள், மேற்கத்திய சக்திகளின், ஆதிக்கத்தின் கீழ் பொதுவான வரலாற்றைக் கொண்டவை. அதனால் வெளிச் சக்திகளின் தலையீடுகள் குறித்து எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். இத்தகைய தலையீடுகள், சிக்கல்கள், குழப்பங்கள்மற்றும்பேரழிவுகளைத் தருமே தவிர, ஒருபோதும் நன்மைகளைத் தர முடியாது.

சுயாதீனமான மற்றும் அமைதியான இராஜதந்திர கொள்கைகளை கடைபிடிக்கும்சீனா, ஒருபோதும்மற்றவர்களின் உள் விவகாரங்களில் தலையிடாது, அத்தகைய தலையீடுகளைக் கடுமையாக எதிர்க்கிறது. நாம் எப்போதும் சுதந்திரத்தை வலியுறுத்த வேண்டும். வெளிப்புற தலையீடுகளுக்கு எதிராக போராட வேண்டும், சொந்தமாக முடிவுகளை எடுக்க வேண்டும்.

இந்த வழியில் மட்டுமே நாம் சரியான திசையை நோக்கிச் சென்று பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இந்த வெளிச்சக்திகள், நீதி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பது என்ற போர்வையில், மற்ற நாடுகளை எப்போதும் கொடுமைப்படுத்துவதுடன், மற்றவர்களின் உள் விவகாரங்களில் தலையிடுகின்றன.

காலனித்துவ காலங்களில், அவர்கள் ஏனைய நாடுகளின் செல்வத்தை சுரண்டினர், மக்களை அடிமைப்படுத்தினர். புதிய யுகத்தில், பழைய மனநிலையுடன், மற்றவர்களின் உள் விவகாரங்களில் மூக்கை நுழைத்துக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். என்றுள்ளது. (எ)

# மொரகஹகந்த தேக்கத்தில் வெளிக் கிளம்பும் கிராமம்

கொழும்பு, ஜூலை 18

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கமான மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் மூடப்பட்ட கிராமங்கள் மீண்டும் தென்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் கடுமையான வெப்பம் காரணமாக நீர்த்தேக் கத்தின் நீர் மட்டம் நூற்றுக்கு 34 வீதம் வரை குறைவடை ந் துள்ளது. அதையடுத்து நீரில் மூழ்கியிருந்த பல கிராமங்கள் மீண்டும் வெளித்தெரிய ஆரம்பித்துள்ளன.



மொரகஹகந்த நீர்த்தேக்க உருவாக்கம் காரணமாக வேறு பிரதேசங்களுக்குக் குடியேறிய மக்கள், மீண்டும் வெளித்தெரிய ஆரம்பித்துள்ள தங்கள் கிராமங்களைப் பார்ப்பதற்கு படையெடுத்து வருகின்றனர். மீண்டும் தோன்றிய தங்கள் கிராமத்தில் உடைந்த நிலையில் உள்ள தங்கள் வீடுகளைப் பார்ப்பதற்கு பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை திரள்வதை அவதானிக்க முடிகின்றது.

தங்கள் வீடுகளை மூழ்கடித்து நீர்த்தேக்கம் உருவாக்கிய போதிலும் தமக்கு குடிப்பதற்கு சுத்தமான நீர் இல்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# ஹேமசிறியிடம் 9 மணிநேரம் வாக்குமூலம்

கொழும்பு, ஜூலை 18

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் சுமார் 9 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாகவே வாக்குமூலம் பெறப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, இரவு 7 மணி வரை வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-22)

# மன்னிப்புக் கோரும் அவசியமே இல்லை

## இராஜங்க அமைச்சர் ரஞ்சன் தெரிவிப்பு

மகா சங்கத்தினரை அவமதிக்கும் அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. அதனால் மகா சங்கத்திடம் மன்னிப்புக்கேட்கவேண்டிய அவ சியம் இல்லை என்று இராஜாங்கஅமைச்சர்ரஞ்சன் ராம நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் கூக்குரல் இட்டுத் திரியும் 90க்கும் அதிகமான பிக்குகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்பட்டவர்கள் எனவும் அதனால் மன அழுத்தங்களுக்கு உட்பட்டதாலேயே இவ்வாறு தேரர்கள் குரோதத்துடன் காணப்படுகின்றனர் என்று சமூக வலைத்தளத்தில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பதிவிட்டார் என்று கூறப்படுகின்றது. அதையடுத்து அவருக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்தநிலையில் கடந்த திங்கட் கிழமை இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே ரஞ்சன் ராமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார்.

அவர்தெரிவித்துள்ளதாவது:

நான் ஒருபோதும் மகா சங்கத்தை அவமதிக்கும் எந்த அறிக்கையும் வெளியிடவில்லை. நான் கூறியது என்னவென்றால், ஒரு சில துறவிகள் மட்டுமே இரத்தத்துக்காகக் கத்துகிறார்கள், இந்தத் துறவிகளில் 90 சதவீதம் பேர் தலைமைத் துறவிகளால் வழி நடத்தப்படுகிறார்கள். என்பதுதான் நான் சொன்னது என்னவென்றால், ஒரு சில துறவிகள்தலைமை துறவிகளால் வழிநடத்தல் செய்யப்படுகிறார்கள் என்றுதான்.

நான் கூறிய கருத்து திரிபுபடுத்தப்பட்டுள்ளது. எனது அறிக்கையை அதன் உள்ளடக்கத்தைச் சிதைத்து திரிபுபடுத்தியவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பேன். - என்றார். (எ)

# தேர்தல்களை இலக்கு வைத்தே ரிசாத்துக்கு ரணில் பாதுகாப்பு!

## குற்றஞ்சாட்டுகின்றார் ரத்ன தேரர்

கொழும்பு, ஜூலை 18

தேர்தல்களைக் கருத்தில் கொண்டே முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலிய ரத்ன தேரர். சிலாபத்தில் கடந்த திங்கட் கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டி யுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இரண்டு மாத கால விசாரணையின் ஊடாக முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், எந்தகுற்றமும்புரியவில்லையென்று தீர்ப்பு வழங்க முடியும் என்றால், அதை விசாரணை செய்த பொலிஸார் எத்தகைய புதுமையானவர்களாக இருக்க முடியும்.

சதொச முறைக்கேடு, வாகன முறைக்கேடு, இடப் பறிமுதல் எனப் பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவைகள் அனைத்தும் பொய்யென கூறி முடிவுக்கு கொண்டுவரப்படுமாயின் நாட்டில் அரசு ஒன்று இல்லையென்றேகூறவேண்டும். ரிசாத்தைப் பாதுகாப்பது ரணில் விக்ரமசிங்கவே. அதற்கு காரணம், தேர்தலில் அவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே.

ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். தேர்தலில் முஸ்லிம் வாக்குகளைப்பெற்றுக்கொள்வதற்காகரிசாத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் செயற்பட்டால், ஐக்கியதேசியக்கட்சியின்10இலட்சம்வாக்குகளை இழக்கநேரிடும்- என்றார்.(எ)

# பிரச்சினைகளை உருவாக்கி தேர்தலைப் பிற்போட முயற்சி

## நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 18

இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கி, தேர்தலை பிற்போட அரசு தயாராவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

சூரியவெவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த அரசு மிகவும் தந்திரத்துடன் இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தி, மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக் கின்றது. தேர்தல்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரும், அரச தலைவரும் ஒருவர் மீது மற்றொருவர் பொறுப்புகளைச் சுமத்தி கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு தற்போது முற்றிலுமாக தகர்க்கப்பட்டுள்ளது. - என்றுள்ளது. (எ)

# ஹெரோய்ன், பணத்துடன் ஐவர் கைது

கொழும்பு, ஜூலை 18
களுத்துறை பகுதியில் ஹெரோய்ன், ஒரு தொகைப் பணம் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் பயன்படுத்தும் தொடர்பாடல் சாதனம் என்பவற்றுடன் நேற்று முன்தினம் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொரளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து 2 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோய்ன், வோக்கி டாக்கி, 80 ஆயிரத்து 550 ரூபா பணமும் என்பன மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் சிறைச்சாலை கைதியொருவரை பார்ப்பதற்காக காரில் சென்று கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

# சிறுபான்மை மக்களின் வாக்குக்காக பொய்கள் கூறுகின்றது ஐ.தே.கட்சி

*ரத்நாயக்க எம்.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 18
தேர்தல் நேரத்தில் சிறுபான்மையின மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மகிந்த ராஜபக்சவுக்கும், கோத்தபாய ராஜபக்சவுக்கும் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள என்ன கொள்கைத்திட்டம் உள்ளது? அவர்கள் எதைக் கூறி தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்றுகொள்ளப் போகின்றனர். அதனை முதலில் அவர்கள் கூற வேண்டும்? என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரச தலைவர் தேர்தலில் நிச்சயம் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி (பெரமுன) அனைத்து இன மக்களின் வாக்குகளையும் பெற்று வெற்றிப் பெறும். முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச சிறுபான்மையினருக்கு எதிரானவர் என ஆளும் தரப்பினர் பொய்ப் பரப்புரை செய்கின்றனர்.

தேர்தல் நெருங்கும் காலத்தில் சிறுபான்மையின மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஐ.தே.கவினர் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவர் குடும்பத்தார் மீதும் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி தேர்தல் பரப்புரைகளை முன்னெடுப்பார்கள்.

ஆனால் அடுத்து நடைபெறவுள்ள தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு நிச்சயம் நாட்டு மக்கள் இனவேறுபாடு இன்றி ஆதரவு வழங்குவார்கள் - என்றார். (எ)

# நாடாளுமன்ற குழுவினர் சீனா பயணம்

கொழும்பு, ஜூலை 18
இலங்கை சீன நாடாளுமன்ற உறுப்பினர்களின் நட்புறவு நிமித்தம் ஆளும், எதிர்க்கட்சி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாள் உத்தியோக பூர்வப் பயணம் மேற்கொண்டு நேற்றுமுன் தினம் சீனா சென்றுள்ளனர். எதிக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்க ளுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, ஹெகலிய ரம்புக்வெல்ல, மஹிந்தானந்த அளுத்கமகே, லக்ஷ்மன் யாபா அபேவர்தன மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர். (எ)

# ரணில் செய்வது சட்ட விரோதம்!

*குற்றஞ்சாட்டுகின்றார் ஊவா மாகாண முதலமைச்சர்*

கொழும்பு, ஜூலை 18
தலைமை அமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட காணி தொடர்பான சட்ட மூலம் தொடர்பாக ஊவா மாகாண சபையின் கருத்துக்கள் கேட்கப்படவில்லை. இது ஒரு சட்ட விரோத செயற்பாடாகும்.

இவ்வாறு ஊவா மாகாகண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார். ஊவா மாகாண சபையின் முதலமைச்சர் பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் ஏதாவது ஒரு சட்ட மூலம் சமர்பிக்கப்படும் முன் மாகாண சபைகளில் சமர்பித்து அனுமதி பெற வேண்டியது கட்டாயமாகும். காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கே இருந்து வருகின்றது. வழமையாக இருந்து வந்த முறையைத் தலைமை அமைச்சர் மாற்றியமைக்க முயற்சிக்கின்றார். இதன்மூலம் பெரும் பிரச்சினைகள் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடும்.

இலங்கையில் மாகாண சபைகளின் அனுமதி மற்றும் கருத்துக்களை கேட்காமல் நாடாளுமன்றத்தில் சமர்பித்து சட்டமூலமொன்று நிறைவேற்றப்ப டும் பட்சத்தில் அதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லக்கூடிய நிலையும் உருவாகும்.

மாகாண சபைகளின் அனுமதியின்றி நாடாளுமன்றத்தில் சட்டமூலமொன்று நிறைவேற்ற முடியாது - என்றார். (எ)

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் மக்களுக்கான ஒரு நாடகமே!

*ஆனந்தன் எம்.பி. இப்படித் தெரிவிக்கிறார்*

வவனியா, ஜூலை 18
மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய முன்னணியும் ஒரு மையப் புள்ளியிலிருந்து தான் வேலை செய்கின்றார்கள். அண்மையில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு நாடகமே என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

போர் நிறைவடைந்த பின்னர் முதன்முதலாக யாழ்ப்பாணம் நாவற்குழியில் கடந்தசனிக்கிழமைவிகாரை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி சிவசக்தீ ஆனந்தனிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது வெறுமனே ஒரு நாடகம். மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்வெற்றியளிக்காது என்று ஏற்கனவே தெரியும். காரணம் இந்த அரசைக் கவிழ்க்கக் கூடாது என்பதிலேயே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுதியாக இருக்கின்றது.

அதேபோல், அரசு தற்சமயம் பலமாக இருக்கின்றது என்பதை தெற்கில் சிங்கள மக்கள் மத்தியிலே காட்டிக் கொள்வதற்காகவேதான் மக்கள் விடுதலை முன்னணி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தது.

அதற்காகவே மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய முன்னணியும் ஒரு மையப் புள்ளியில் இருந்துதான் வேலை செய்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது ஒரு நாடகம் - என்றார்.

வடக்கு - கிழக்கில் ஆயிரம் விகாரைகளைச் சீரமைக்க வருடாந்தம் பல ஆயிரம் மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்படுகின்றது.

வரவு- செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்படுகின்ற நிதி ஊடாகவே வடக்கு -கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கன்னியா வெந்நீரூற்று, செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம், யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்களின் பூர்வீக நினைவுச் சின்னங்கள் அளிக்கப்படுகின்றன. வரவு - செலவுத் திட்டத்துக்கு முழு உறுதுணையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளனர் - என்றார்.

இத்தகைய வரவு- செலவுத் திட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரவளிக்கின்றனர் என்று சிவசக்திஆனந்தன் குற்றஞ்சாட்டுகின்றார். எனினும், கூட்டமைப்பில் இருக்கும்போது சிவசக்தி ஆனந்தனும் எத்தனையோ வரவு-செலவுத் திட்டங்களுக்கு ஆதரவளித்திருந்தார். - (த)

# மின்னல் தாக்கி பொலிஸ் அதிகாரி படுகாயம்

கொழும்பு, ஜூலை 18
சியம்பலாண்டுவை பகுதியில் ஏற்பட்ட மின்னல் தாக்குதலில் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் நேற்றுப் படு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

அந்தப் பகுதியில் கடும் மழை பெய்து வருவதால் இடி மின்னல் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. சியம்பலாண்டுவை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றி வரும் எஸ். ஏ. ரேவத்த என்ற பொலிஸ் அதிகாரியே படுகாயமடைந்துள்ளார். அத்துடன் மின்னல் தாக்குதலால் பொலிஸ் நிலையத்தின் தொலைதொடர்பு, மின் சாதனங்கள் அனைத்தும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன. (எ)

# பெரமுனவின் பரப்புரையில் பசிலே முதன்மை வகிப்பார்

*பீரிஸ் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 18
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) அரச தலைவர் தேர்தல் பரப்புரைப் பணிகளின் முதன்மைப் பொறுப்பை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவே வகிப்பார் என்று அந்தக் கட்சியின் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் கடந்த திங் கட்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை மாவட்ட மட்டங்களில் மேற்கொள்ளும். அது மிகவும் கவர்ச்சிகரமான முறையில் முன்னெடுக்கப்படும்.

அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்யும் முழுமையான அதிகாரம் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் அறிவிக்கும் வேட்பாளருக்குப் பின்னே அனைவரும் அணி திரள்வார்கள்.

அந்த வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெறுவார். நாடாளுமன்றத் தேர்தலிலும் பொதுஜன பெரமுன வெற்றி பெறும் - என்றார். (எ)

# போதை ஒழிப்புப் பிரிவு மதுஷிடம் விசாரணை

கொழும்பு, ஜூலை 18
பாதாள உலகக்குழு தலைவர் மாகந்துரே மதுஷிடம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பிலும் மாகந்துரே மதுஷிடம் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். அடுத்த இரண்டு வாரங்களுக்கு மதுஷிடம் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது என்றுழ் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டுபாயில் இருந்து நாடு கடத்தப்பட்டுள்ள நிலையில் மாகந்துரே மதுஷ் பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)

# ஐ.தே.க. வேட்பாளருக்கு கோத்தா சவால் இல்லை

*வசந்த அலுவிஹாரே தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 18
ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளருக்கு கோத்தபாய ராஜபக்ச சவாலாக இருக்க மாட்டார் என இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிஹாரே தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அடுத்து இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளரின் வெற்றி உறுதி. செயற்குழு சரியான நேரத்தில் சரியான வேட்பா ளரைப் பரிந்துரைக்கும். அரச தலைவர் தேர்தலில் கட்சியால் களமிறக்கப்பட்ட வேட்பாளரை எந்த சக்தியும் தோற்கடிக்க முடியாது. இந்த தேர்தலில் கட்சி ஒரு பொதுவான வேட்பாளரை நிறுத்தாது. - என்றார். (எ)



பாகிஸ்தானின் லாகூர் நகரில் கடும் மழை பெய்தது. இதனால் லாகூர் வெள்ளத்தில் மிதக்கிறது. அங்கு மழை ஓய்ந்த பின்னர், வெள்ளநீருக்கு மத்தியில் காய்கறிகளை விற்பதற்காக வாடிக்கையாளர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் வியாபாரி ஒருவர்.

# இறந்து கிடந்த புலியின் வயிற்றுக்குள் சவர அலகு!

## அதிர்ச்சியில் உறைந்தனர் வனத்துறையினர்



புதுடெல்லி,ஜூலை 18
இறந்து கிடந்த ஆண் புலி ஒன்றின் உடலைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அதன் வயிற்றில் சவர அலகின் (பிளேட்) துண்டு ஒன்று இருந்தது தெரிய வந்தது. இந்தியாவின் நீலகிரி மாவட்டம் பார்சன் பள்ளத்தாக்கில் இறந்து கிடந்த புலியின் வயிற்றிலேயே இந்தச் சவர அலகு கணப்பட்டது. இதைக் கண்டறிந்த அந்தப் பகுதி வனவளத்துறை அதிகாரிகள் அதிர்ச்சியில் உறைந்தனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

புலிகளின் வாழ்விடமாக உள்ள பார்சன் பள்ளத்தாக்கில் சுமார் இரண்டரை வயதுள்ள ஆண்புலி ஒன்று இறந்து கிடப்பது அந்தப் பகுதி வனத்துறையினர் கவனத்துக்கு வந்ததை அடுத்து அவர்கள் அங்கே விரைந்தனர். அது நஞ்சு வைத்துக் கொல்லப்பட்டுள்ளதா என்பது குறித்து அங்கு சென்ற அதிகாரிகள் ஆராய்ந்தனர். உடற் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

அதன்போது புலியின் வயிற்றில் இருந்து ஒரு சவர அலகுத் துண்டு எடுக்கப்பட்டது. பார்சன் பள்ளத்தாக்குக்கு அண்மையாகத் தீட்டுக்கல் என்ற இடத்தில் மிகப் பெரிய குப்பைக்கிடங்கு உள்ளது. வன விலங்குகளின் வாழ்விடத்துக்கு அருகில் உள்ள அந்தக் குப்பைக்கிடங்கைச் சுற்றி வேலி அமைக்கப்படாமல் உள்ளது. அதுவே இந்தப் புலியின் இறப்புக்குக் காரணம். இதனால், இன்னும் பல காட்டு உயிர்களுக்குப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று வனத்துறையினர் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.



# ஹபீஸ் சயீத் கைது பாகிஸ்தான் அதிரடி

இஸ்லாமாபாத்,ஜூலை 18
பாகிஸ்தானில்இருந்துசெயற்படுகின்றஜமாத்உத்தவாஆயுத அமைப்பின் தலைவரான ஹபீஸ் சயீத் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பாகிஸ்தானின் லாகூர் நகரில் தங்கி இருந்த அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எனினும் இதுதொடர்பாக பாகிஸ்தான் அரசு தகவல் எதையும் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை.

**பின்னணி**

இந்தியாவின் மும்பையில் 2011ஆம் ஆண்டுநடந்தகுண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறார் ஹபீஸ் சயீத். ஜமாத் உத் அவா ஆயுத அமைப்பும், அவரது தொண்டு நிறுவனமான பலாஹ் இ இன்சோனியத்தும் ஐ.நா உத்தரவுப்படி தடை செய்யப்பட்டுள்ளன. ஹபீஸ் சயீத்தைக் கைதுசெய்துஒப்படைக்கவேண்டும்எனஇந்தியாதொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது.



# எங்கள் பிராந்தியத்தில் ஆயுதம் விற்கக்கூடாது

## அமெரிக்காவுக்கு ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான்,ஜூலை 18
ஏவுகணைச்சோதனைதொடர்பாகஅமெரிக்காஎங்களுடன் பேச்சு நடத்த விரும்பினால் எங்கள் பிராந்தியத்தில் ஆயுதங்கள் விற்கக்கூடாது என்று ஈரான் தெரிவித்தது. ஈரானின் அயலுறவுத் துறை அமைச்சர் ஜாவத் சாரிவ்ப்பே இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காஎங்களுடன்ஏவுகணைச்சோதனைதொடர்பாக பேச்சு நடத்த விரும்பினால் அவர்கள் ஆயுதங்கள், ஏவுகணைகளைஎங்கள்பிராந்தியத்தில்விற்பதைநிறுத்தவேண்டும் என்றார் அவர்.



# இன்றைய நாள்

**மேடம்:** சிலரது செயலால் மனதில் வருத்தம் தரலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்யவும். சுமாரான அளவில் பணவரவு கிடைக்கும். விஷப் பிராணிகளிடம் விலகவும்.

**இடபம்:** புதிய முயற்சிகளை செயல்படுத்த விரும்புவீர்கள். தொழில் வியாபாரத்தில் கூடுதல் நேரம் பணிபுரிய நேரிடலாம். சராசரி அளவில் பணவரவு இருக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வர தாமதமாகலாம்.

**மிதுனம்:** அக்கம் பக்கத்தினருடன் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கடகம்:** பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடையும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.

**சிம்மம்:** பிறரது அதிருப்திக்கு ஆளாகாதபடி நடப்பது நல்லது. தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் செய்வீர்கள்.

**கன்னி:** முக்கிய செயலில் கூடுதல் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**துலாம்:** லட்சியநோக்குடன் செயல்படுவீர்கள். நண்பர் மற்றும் உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான முன்னேற்றம் இருக்கும். லாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** குறைவாக பேசுவதால் சிரமம் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணச்செலவில் சிக்கனம் அவசியமாகும்.

**தனுசு:** உங்களின் மனம் தெளிந்த நீரோடை பேரல இருக்கும். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் அபிவிருத்தியாகும். உபரி பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். வருமானம் மிதமாக இருக்கும்.


**கும்பம்:** நற்செயல்களில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி மனநிறைவை ஏற்படுத்தும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர்.

**மீனம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்கும். பணவரவு அதிகரிக்கும். உறவினர்களின் தேவையறிந்து உதவுவீர்கள்.

# இனவாதக் கருத்து வெளியிட்டார் ட்ரம்ப்

## அமெ. நாடாளுமன்றில் கண்டனத் தீர்மானம்





வோஷிங்டன்,ஜூலை 18

அமெரிக்க நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் நால்வரின் பூர்வீகம் குறித்துத் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். அந்தப் பதிவு அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் அந்த நாட்டு நாடாளுமன்றில் அவருக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளைப் பூர்வீகமாக கொண்டவர்களாகக் கருதப்படும் அமெரிக்க எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் 4 பேர் குறித்து அண்மையில் தனது கீச்சகப் பக்கத்தில் விமர்சனம் செய்து இருந்தார் ட்ரம்ப். ஈஹான் ஓமர், அலெக்சாண்டிரியா ஒகசியோ, அயான்னா பிரஸ்லி, ரஷிதா டிலாய்ப் ஆகியோர் உடனடியாக அமெரிக்காவில் இருந்து வெளியேற வேண்டும், மிக மோசமான நிலையில் உள்ள தங்களது தாய்நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என அதில் அவர் குறிப் பிட்டார். இவர்கள் நால்வரும் முறையாக அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்கள். இவர்களில் மூன்றுபேர் அமெரிக்காவில் பிறந்து, படித்து, வளர்ந்தவர்கள்.

இந்த விவகாரம் அமெரிக்க நாடாளுமன்றின் கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையில் எதிரொலித்தது. பிரதிநிதிகள் சபையில் ஜனநாயகக் கட்சியினர் பெரும்பான்மையினராக உள்ளனர். இதனால் ட்ரம்ப் தனது கருத்தை திரும்ப பெறக்கோரி தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

ட்ரம்புக்கு எதிரான அந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜனநாயக கட்சியைச் சேர்ந்த குறித்த பெண் உறுப்பினர்களுக்கு எதிராக ட்ரம்ப் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் விதமாக அந்த நாட்டின் பிரதிநிதிகள் சபை வாக்களித்தது. 'தங்கள் நிறம் குறித்த அச்சத்தைப் புதிய இளம் அமெரிக்கர்களிடம் ட்ரம்பின் இந்தக் கருத்துக்கள் அதிகரித்துள்ளன' என்று அதிபருக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகக் கட்சி அதிகாரத்தில் உள்ள இந்தச் சபை அதிபர் ட்ரம்புக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்துக்கு ஆதரவாக 240 வாக்குகளும், ட்ரம்புக்கு ஆதரவாக 187 வாக்குகளும் பதிவாகின. அத்தோடு ட்ரம்புக்கு எதிராகப் பிரதிநிதிகள் சபையின் தீர்மானத்துக்கு ஆதரவாகக் குடியரசுக் கட்சி உறுப்பினர்களில் நால்வரும், சபையிலிருக்கின்ற ஒரே ஒரு சுயேச்சை உறுப்பினரும் வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அயல்நாட்டினர் மீது வெறுப்பை உமிழ்கிறார் டொனால்ட் ட்ரம்ப்

## பெண் உறுப்பினர்கள் கண்டனம் தெரிவிப்பு

வோஷிங்டன்,ஜூலை 18

பல ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவுக்குள் நுழைந்து குடியுரிமை பெற்றவர்கள் மீது வெறுப்பை உமிழ்கிறார் ட்ரம்ப் என்று அமெரிக்காவின் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர். மெக்சிக்கோ, சிரியா, துருக்கி, நைஜீரியா, சோமாலியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்குள் தஞ்சம் அடைகின்ற மக்களை நாட்டுக்குள் நுழைய விடாமல் குடியுரிமை தொடர்பான கடுமையான சட்டத்திட்டங்களை அதிபர் ட்ரம்ப் நடைமுறைப்படுத்தியுள்ளார் என்றும் குறித்த பெண் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

"நிற வேறுபாட்டைக் காரணமாக வைத்து மக்களிடையே அச்சத்தையும் வெறுப்புணர்வையும் அதிகரிக்க வைத்து, அமெரிக்காவை மீண்டும் 'வெள்ளை மயம்' ஆக்குவதற்கு முயற்சிக்கும் ட்ரம்ப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்படும்" என நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசியும் குறிப்பிட்டார்.

குறித்த பெண் உறுப்பினர்களைச் சுட்டும் விதமாகத் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் இனவாதக் கருத்துக்களைப் பதிவிட்ட ட்ரம்ப்புக்கு எதிராக அமெரிக்கா நாடாளுமன்றில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையிலேயே அயல் நாட்டினர் மீது வெறுப்பை உமிழ்கிறார் அதிபர் ட்ரம்ப் என்று குறித்த பெண் உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.



# முகநூல் நம்பகத் தன்மையற்றது!

## அமெரிக்கத் தரப்பில் தெரிவிப்பு

நியூயோர்க்,ஜூலை 18

முகநூல் நிறுவனம் உண்மைத் தன்மையற்றது, நம்பகத்தன்மையற்றது என விமர்சிக்கப்பட்டுள்ளது. முகநூலின் புதிய பணப் பரிமாற்றத் திட்டம் குறித்தே இந்த விமர்சனம் முன்வைக்கப்பட்டது. 'லிப்ரா' எனும் பணப்பரிமாற்றச் சேவையை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது முகநூல்.

இது தொடர்பாக அமெரிக்க செனட் வங்கிக் குழுவின் முகநூல் நிர்வாகியான டேவிட் மார்கஸை விசாரித்தது. "தவறுகளுக்கு மேல் தவறுகளை முகநூல் நிறுவனம் செய்துள்ளது. எங்கள் நம்பிக்கைக்கு ஏற்ற நிறுவனம் அல்ல முகநூல்" என்று செனட்டர் செரோட் ப்ரவுன் அதன்போது கூறினார்.

முதலில் முகநூல் தங்கள் பிழைகளைச் சரி செய்துவிட்டுப் புதிய தொழிலில் இறங்கட்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# குடியரசுக் கட்சி ஒற்றுமையாக இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது

## ட்ரம்ப் தெரிவிப்பு



வோஷிங்டன், ஜூலை 18

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில் குடியரசுக் கட்சி ஒற்றுமையாக இருப்பது தனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் இனவாதக் கருத்துகளைப் பதிவிட்டார். அதைத் தொடர்ந்து அமெரிக்க நாடாளுமன்றத்தில் ட்ரம்ப்புக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதில் ட்ரம்ப்புக்கு எதிராக 240 வாக்குககளும் ஆதரவாக 184 வாக்குகளும் பதிவாகின. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, "ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பற்றி நான் கூறிய கருத்துகள் தொடர்பாக இன்றைய வாக்கெடுப்பில் குடியரசுக் கட்சி எவ்வளவு ஒற்றுமையாக இருந்தது என்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று கீச்சகத்தில் பதிவிட்டார் ட்ரம்ப். ஆனால் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் ட்ரம்புக்கு எதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹொங்கொங்கில் வன்முறை கேரிலேம் கண்டனம் தெரிவிப்பு



ஹொங்கொங், ஜூலை 18

ஹொங்கொங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. இதில் போராட்டக்காரர்களை விரட்டுவதற்கான செயல்களில் பொலிஸார் ஈடுபட்டனர். இந்த வன்முறையில் இரண்டு தரப்புகளுக்கும் காயம், சேதம் என இழப்புகள் ஏற்பட்டன. 28 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், இந்த வன்முறையில் காயம் அடைந்த பொலிஸ் அதிகாரிகளை நேரில் சென்று நலம் விசாரித்த ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லேம் போராட்டக்காரர்களைக் கலகக்காரர் என்று குறிப்பிட்டார். "பொலிஸார் தங்கள் வேலையை முழுமையான அர்ப்பணிப்புடன் செய்துள்ளனர். ஆனால் அவர்கள் போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டனர். இந்தப் போராட்டக்காரர்களை கலகக்காரர்கள் என்றே நினைக்கிறேன்" என்றார்.

**பின்னணி**

பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தில் இருந்த ஹொங்கொங் 1997ஆம் ஆண்டு சீனாவின் நிர்வாகப் பகுதிகளில் ஒன்றானது. சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தாலும், சுயாட்சிப் பிரதேசமான அதற்கெனத் தனியான பண அலகு, சட்டம், அரசமைப்பு எல்லாம் உள்ளன.

இந்த நிலையில், குற்றவாளிகளைச் சீனாவுக்குப் பரிமாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்தத் தீர்மானத்தைக் ஹொங்கொங் நிர்வாகம் கடந்த மாதமளவில் கொண்டு வந்தது.

அதற்கு ஹொங்கொங்கின் எதிர்க்கட்சியினரும் பொதுமக்களும் எதிர்ப்பு தெரிவித்துப் போராட்டத்தில் இறங்கினர். இதனைத் தொடர்ந்து குறித்த தீர்மானத்தை நிறுத்தி வைப்பதாக கேரி லேம் அறிவித்தார்.

எனினும் அது குறித்த நடைமுறைகள் இடம்பெறவில்லை. இதனால், அந்தத் தீர்மானத்தை முழுமையாக நீக்குமாறு ஹொங்கொங்கில் போராட்டம் தொடர்கிறது.



தரையிறங்க முற்பட்ட வானூர்தி ஒன்று வழக்கத்தை விடத் தாழ்வாகப் பறந்து கடற்கரையில் நின்று கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகளின் தலையை உரசப் பார்த்தது. கிரீஸின் வடமேற்கிலுள்ள ஸ்கியாதோஸ் தீவுக்கு அருகில் அமைந்துள்ள வானூர்தி நிலையத்தில் தரையிறங்க முற்பட்ட வானூர்தியே இவ்வாறு தாழ்வாகப் பறந்தது. இது குறித்த ஒளிப்படங்கள், காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பரவின.

# பெரமுனவின் தலைவராகிறார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

கொழும்பு, ஜூலை 18
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுனவின்) தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்ணான்டோ தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
மேலும் அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளார் என்றும் அருந்திக பெர்ணான்டோ தெரிவித்தார். அந்த வகையில் எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள பொதுமக்கள் முன்னணியின் கட்சி மாநாட்டில் இந்த நியமனங்களை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளோம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# உள்வீட்டு மோதல் வெற்றியைப் பாதிக்கும் ஐ.தே.கவுக்கு மனோகணேசன் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 18
ஐக்கிய தேசியக் கட்சியினர் குழுக்களாக பிரிந்து தமக்குள்ளேயே சண்டையிட்டால் அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற முடியாதென அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் வேட்பாளர் விவகாரத்தால் ஐக்கிய தேசியக் கட்சியினுள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. மேலும் கட்சிக்குள் வெள்வேறு குழுக்கள் உருவாகி, அவர்களுக்கென வெள்வேறான திட்டங்களை அமைத்துக் கொள்கின்றனர்.
இவ்வாறு கட்சிக்குள்ளேயே பிரிவினைவாதத்துடனும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டும் இருந்தால் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறமுடியாமல் போகும் - என்றார். (ஒ.5)

## தமிழர்கள்...

தேரரின் அடாவடிக்கு எதிராகப் பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டமும் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.
இது தொடர்பில் தோட்ட மக்களால் கந்தப்பளை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து நுவரெலியா பொலிஸ் வலயப் பொலிஸ் அத்தியட்சகர், நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கலந்துரையாடியபின் கொடியை அகற்றினர். இதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர். (ம-22)

## நீராவியடி...

டிகள் கட்டப்பட்டு ஆலயம் அலங்கரிக்கப்பட்டது. அவ்வாறு கட்டப்பட்ட கொடிகள் நேற்றுமுன்தினம் அறுத்து எறியப்பட்டுள்ளன் என்று நேற்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
குறித்த பகுதியில் விகாரை நிறுவும் நோக்குடன் சமீபகாலமாக அடாவடியில் ஈடுபடும் பிக்குவே இதைச் செய்திருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் தெரிவித்தனர். (ம-22)

## பெரமுனவின்...

மக்கள் முன்னணியின் (பெரமுனவின்) தாளத்துக்கு எம்மால் ஆடமுடியாது. வரவிருக்கும் தேர்தல்களில் பொதுமக்கள் முன்னணியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து பணியாற்ற வேண்டுமானால் இரு கட்சிகளின் இணக்கப்பாட்டுடனேயே அரச தலைவர் வேட்பாளர் விவரங்கள் அறிவிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொதுமக்கள் முன்னணியினர் தாமகவே ஒரு வேட்பாளரை நியமித்து எமது ஆதரவைக் கேட்டால் நாம் வேறு முடிவுகளை எடுக்கவேண்டி இருக்கும். இரு கட்சிகளும் பேசியே வேட்பாளர் குறித்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்களை ஏமாற்றும் வேலைகளையே ரணில் செய்கிறார். அரசியல் தீர்வு தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்து தமிழர்களின் வாக்குகளை பெறுவதற்கு போடப்பட்ட நாடகம் என்றார். (ம)

## தூதுக்குழுவை...

எழுதும்படி தனது இணைப்புச் செயலருக்குத் தான் கூறவில்லை என அரச தலைவர் என்னிடம் கூறினார். அப்படி எழுதப்பட்டிருந்தால் இதுபற்றி விசாரிப்பதாகவும் அவர் உறுதியளித்தார். இது தொடர்பில் தமிழ் எம்.பிக்களுடன் தூதுக்குழுவைச் சந்திக்க என்னிடம் அவர் உடன்பட்டார். அதற்கேற்ப நாளை (இன்று) காலை11.00 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.
அரச தலைவருடனான உரையாடலையடுத்து இவ்விவகாரம் பற்றி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரை, எந்தவித விகாரை கட்டுமானப் பணிக்கும் கன்னியாவில் இடம் கொடுக்க வேண்டாம் என திருகோணமலை மாவட்ட செயலர் புஸ்பகுமாரவை அழைத்து நான் கூறியுள்ளேன்' எனவும் அமைச்சர் மனோ குறிப்பிட்டார்.
கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயத்தின் அத்திபாரம் பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் இடிக்கப்பட்டமை தொடர்பில் சர்ச்சை நிலவியது. இது தொடர்பில் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி கன்னியாவுக்கு விஜயம் செய்து இந்து, பௌத்த இரு தரப்பினருடனும் சந்திப்பு நடத்தியிருந்தார்.
இதன்போது கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த விகாரை கட்டமாட்டோம் எனவும், அங்கு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம் எனவும் கன்னியா விகாரை தேரர்கள் உடன்பட்டனர் எனவும், கன்னியா வளவுக்குள் வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயம் அமைக்கவும், வெந்நீரூற்று சிவன் ஆலயத்தையும் புனரமைக்கவும் உடன்பாடு காணப்பட்டது எனவும், இது தொடர்பான அடுத்தகட்ட கலந்துரையாடலை கொழும்பில் அரச தலைவர், தலைமை அமைச்சர், இந்து சமய, பௌத்த மத விவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் மட்டத்தில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது எனவும் அமைச்சர் மனோ கணேசன் அன்று தெரிவித்திருந்தார்.
எனினும், அதன்பின்னரும் கன்னியா வெந்நீரூற்றில் பௌத்தர்களின் அராஜகம் தொடர்ந்தது. இதற்கு எதிராகவே நேற்று கன்னியாவில் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு போராட்டம் நடத்தியிருந்தனர்.
இந்தநிலையிலேயே கன்னியா விவகாரம் குறித்து தமிழ் எம்.பிக்களுடன் தூதுக்குழுவைச் சந்திக்க அரச தலைவர் இணங்கியுள்ளார் என்று அமைச்சர் மனோ கணேசன் நேற்று தெரிவித்துள்ளார். (ம-22)

## தமிழர்கள் தாக்கப்பட்டமை ...

வித்து அங்கு திரண்ட மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இனவெறித் தாக்குதல் மிகவும் கீழ்த்தரமான செயல் என்று குறிப்பிட்டு கண்டனம் தெரிவித்துள்ளது ரெலோ அமைப்பு.
இது தொடர்பில் அந்தக் கட்சி அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
கன்னியா வெந்நீருற்று பிள்ளையார் கோவில் இடித்து அழிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு திரண்ட தமிழ் மக்களுக்கு எதிராக பௌத்த சிங்கள இனவெறி தனது கோர முகத்தைக் காட்டியுள்ளது. தென்கையிலை ஆதினம் அகத்தியர் அடிகள் மீதும், கன்னியா வெந்நீருற்றுக் காணியின் உரிமையாளரான பெண் ஒருவர் மீதும், மேற்கொள்ளப்பட்ட கீழ்த்தரமான தாக்குதல் மூலம், பௌத்த - சிங்கள இனவெறியின் காட்டுமிராண்டித்தனம் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இந்த வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அங்கிருந்த பொலிஸ் படை தவறியிருக்கின்றது.
மாறாக, அங்கு திரண்டு வந்திருந்த தமிழ் மக்கள் மீது அடக்குமுறை கலந்த அழுத்தம், பொலீஸாரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாரபட்சமின்றி செயற்பட வேண்டிய பொலிஸ் அதிகாரிகள் சிங்கள - பௌத்த உணர்வாளர்களாகச் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் அரசின் அணுகுமுறையும் நடவடிக்கையுமே.
ஆயிரம் விகாரைகளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்போவதாக கடந்த உள்ளூராட்சி தேர்தலில் பகிரங்கமாக அறிவிப்புச் செய்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கும் அரசே கன்னியா பிரச்சினைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.
இதேவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில்லை என்றால், நான் இன்று தலைமை அமைச்சராக உங்கள் முன் நின்று கொண்டிருக்க முடியாது என்று சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலை நகரில் மனத்திறந்து பேசிய ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு, கன்னியா பிரச்சிரனையில் தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்டுவதோடு உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக எடுத்தாக வேண்டும்.
கூட்டமைப்பின் தலைவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் திருகோணமலை மாவட்டத்தில், தமது அடிப்படை உரிமைகளுக்கு தமிழ் மக்கள் போராட வேண்டியுள்ள நிலமையில், அரசுக்கு அழுத்தம் கொடுத்து பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்க கூட்டமைப்பு தவறினால் அதன் நாள்கள் எண்ணப்படும் நிலமை தவிர்க்கப்பட முடியாதது என்பதை சம்பந்தப்பட்ட சகலரும் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும் என்றுள்ளது. (ம)

## தூக்குத்...

னையை செயற்படுத்துவதை கைவிடுமாறு கோரி, தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை, ஆராய்வதற்காக, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் யசந்த கோத்தாகொட தலைமையில், ஐந்து நீதியசர்கள் கொண்ட குழாம் நியமிக்கப்பட்டது.
ஊடகவியலாளர் மலிந்த செனவிரத்னவால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த ரிட் மனு மீதான தீர்ப்பு நேற்று புதன்கிழமை அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கு விசாரணையை ஒத்திவைப்பதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.
இந்த மனுவில் சட்ட மா அதிபர், நீதியமைச்சர், சிறைச்சாலைகள் ஆணையாளர், வெலிக்கடை சிறைச்சாலையின் அத்தியட்சகர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
இதேவேளை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் பன்னிரண்டு அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## கன்னியாவில்...

உடன் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் அது நாட்டின் நல்லிணக்கத்தில் எதிர்பாராத அளவு எதிர்மறையான தாக்கத்தை உண்டுபண்ணும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
கன்னியாவில் சிங்களக் காடையர்கள் நேற்றுமுன்தினம் வெளிப்படுத்திய வெறியாட்டம் தொடர்பில் தான் அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிள்ளையார் ஆலயத்துக்கு உணர்வெழுச்சியுடன் திரண்டு சென்ற தமிழ் மக்கள் நடத்தப்பட்ட விதம் மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது. தென்கயிலை ஆதீனக் குருமுதல்வர் தவத்திரு அடிகளார் மீதும், கோயில் உரிமம் உடையவரான திருமதி கணேஸ் கோகிலரமணி மீதும் எச்சில் தேனீர் ஊற்றிய காடையர்களின் வெறியாட்டம் அருவருப்பை ஏற்படுத்துகிறது.
சிறுபான்மை மக்களும் அவர்களின் மதத் தலங்களும் சிங்களப் பேரினவாதிகளால் தாக்கப்படுகின்றமை இதுவொன்றும் புதிதல்ல. இது தொடர்பான பதிவுகள் இலங்கையில் ஏராளம் ஏராளம் கொட்டிக் கிடக்கின்றன. தற்போதும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவர அரசு இதய சுத்தியுடன் செயற்பட வேண்டியது அவசியம். இல்லையேல் விளைவுகள் பாரதூரமானவையாகவும், தவிர்க்கப்பட முடியாதவையாகவும் அமைந்துவிடும் என்றுள்ளது. (ம)

## தமிழர்கள் மீதான...

தப்பட்டும் கையளிக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் புத்த மதத்துக்கு முதன்மையான இடத்தை ஆதரித்த பின்னர் ஏன் சிவனேசன், சிறிதரன், யோகேஸ்வரன் கன்னியாவுக்கு சென்றார்கள்? அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளில் இருந்து விலக வேண்டும். ரணில் தமிழர் தாயகத்தில் விகாரை கட்டுவதை நிறுத்து, சிங்கள புத்த மத பயங்கரவாத்தினை நிறுத்த தமிழர்களுக்கு அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவி தேவை போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக் காரர்கள் கவனவீர்ப்பை முன்னெடுத்தனர். (ம)

## திருக்கேதீச்சர...

சைவ மக்களின் பிரதான வழிபாட்டுக்குரிய வரலாற்று முக்கியத்துலம் வாய்ந்த திருக்கேதீச்சர ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் அமைக்கப்படவிருந்த வரவேற்பு வளைவை தடுத்து நிறுத்தியமை தொடர்பாக ஆராய்வதற்காகவும், எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்காகவும் இந்தச் சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வட பகுதியில் உள்ள வைச சமய நிறுவனப் பிரதி நிதிகள், சைவாலயங்களின் நிர்வாகிகள், இந்துக் குருமார்கள் மற்றும் இந்து சமய ஆர்வலர்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைக்கும்படி அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுகன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுத் தொடரில் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன. இன்று வியாழக் கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

*** *** ***

தேசிய மட்ட இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை அனுராதபுரம் மாகாண விளையாட்டு கட்டத் தொகுதி உள்ளக அரங்கில் ஆரம்பமாகின்றது. இதில் வடக்கு மாகாண ஆண்கள் அணி மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சப்பிரகமுவ மாகாண அணியுன் மோதவுள்ளது. இதே வேளை மதியம் 12 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண பெண்கள் அணி ஊவா மாகாண அணியுடன் மோதவுள்ளது. (23)



# நாச்சிக்குடா சென். மேரிஸ் கிண்ணத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 18
மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது. கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.
ஆட்டநாயகன் விருதை நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் பிலிப் பெற்றுக் கொண்டார். தொடர் ஆட்டநாயகன் விருதை நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் யோசுதாஸ் பெற்றுக் கொண்டார். சிறந்த கோல்காப்பாளர் விருதை நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் மைக்கல் பெற்றுக் கொண்டார். சுப்பர்கோல் அடித்த வீரருக்குரிய விருதை கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி வீரர் சிந்துஜன் பெற்றுக் கொண்டார். வளர்ந்து வரும் வீரருக்கான விருதை கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக அணி வீரர் துஜீவ் பெற்றுக் கொண்டார். சிறந்த பின்கள வீரருக்கான விருதை கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி வீரர் கிருஸ்ணகரன் பெற்றுக் கொண்டார். சிறந்த நன்னடத்தை அணிக்குரிய விருதை மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி பெற்றுக் கொண்டது. (23)

## கால்பந்தாட்ட சுற்றுத் தொடர்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் கால்பந்தாட்ட பயிற்றுநர் அமரர் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்பந்தாட்டத்தில் முன்னணியில் திகழும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடர் எதிர்வரும் சனி, ஞாயிறுக்கிழமைகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் சுற்றுப்போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, மகாஜனக்கல்லூரி ஆகிய எட்டு அணிகள் பங்குபற்றுகின்றன. (23)

## சித்தி விநாயகர் அபார வெற்றி

யாழப்பாணம், ஜூலை 18
தாழ்வுபாடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மன்னார் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி- 20 துடுப்பாட்டதொடரில் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி 64 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிறுக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களை பெற்றது. இதில் பிராகாஸ் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், பவன் 51 ஓட்டங்களையும், கஜேஸ் 39 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் குகன் 2 இலக்குகளையும், ஜெகன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணி 17 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் வசந்தன் 30 ஓட்டங்களையும், றஞ்சித் 29 ஓட்டங்களையும், அஜந்தன் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சூரி 3 இலக்குகளையும், அனோசன், பிரகாஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)

# சென்.அன்ரனிஸ் வி.க. இறுதிக்கு முன்னேற்றம்



தாழ்வுபாடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம், மன்னார் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி -20 துடுப்பாட்டத் தொடரில் தாழ்வுபாடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி 137 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.விக்ரறிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றோய் 67 ஓட்டங்களையும், மேனன் 27 ஓட்டங்களையும், நிலு 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் றாபேல் 3 இலக்குகளையும், மா்லின் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சென். விக்ரறிஸ் விளையாட்டுக்கழக அணி 13 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் பப்ரிஸ் 16 ஓட்டங்களையும், ஆனந்த் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சுயன், ஜொறோன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், சுகந்தன் 2 இலக்குகளையும் சாய்த்தனர். (23)

## கடினப் பந்து அணிக்கான பதிவுகளை மேற்கொள்ளல்

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தால் 23 வயதுக்குட்பட்ட கடினப்பந்து அணியை தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. எனவே மேற்படி தெரிவில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலை மற்றும் விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் தங்களது பதிவுகளை யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தின் செயலருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (23)



## நாவற்குழி சரஸ்வதி வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 18
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுத் தொடரில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட் கிழமை மின் ஒளியில் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 13:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

# பவுண்டரிகளுக்குப் பதிலாக 2ஆவது சூப்பர்ஓவர் சிறப்பு

## சச்சின் சுட்டிக்காட்டு

பவுண்டரிகளுக்குப் பதிலாக 2ஆவது சூப்பர் பந்துப் பரிமாற்றத்தின் மூலம் உலகக் கிண்ணத் தொடரில் இறுதி ஆட்டத்தின் முடிவை நிர்ணயித்திருக்கலாம் என சச்சின் தெரிவித்தார்.

உலகக் கிண்ணம் போன்ற பெரிய போட்டிகளில் இது போன்ற கையாள முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், பவுண்டரிகளுக்கு பதிலாக கூடுதல் சூப்பர் பந்துப்பரிமாற்றத்தை வழங்கலாம்.

வெற்றி, தோல்வியை முடிவு செய்ய அதிக பவுண்டரிகளை அடித்திருக்க வேண்டும் என்ற ஐ.சி.சி. விதிக்கு மாறாக 2ஆவது சூப்பர் பந்துப்பரிமாற்ற முறையை கடைபிடித்திருக்கலாம் -என்றார்.



# விதிகள் விதிகள்தான்

## வில்லியம்சன் கருத்து

நடைபெற்று முடிவடைந்த இறுதிப் போட்டியில் பவுண்டரிகள் அடிப்படையில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இது குறித்து நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் தெரிவிக்கையில்;

இறுதிப் போட்டியில் யாரும் தோற்கவில்லை. ஆனால் அங்கு கீரிடம் சூடப்பட்ட வெற்றியாளர் இருந்தார், அவ்வளவுதான். உலகக் கிண்ணத்தின் முடிவுகள் தலைக்குள் ஓடிக் கொண்டிருப்பது சற்று கடினம்தான். இதனைப் பகுத்தறிவுடன் ஏற்றுக்கொள்ள சிறிது காலம் தேவைப்படும்.

விதிகள் விதிகள்தான். நோக்கத்தை அடைந்த இங்கிலாந்திடம் இருந்து எதையும் எடுத்துக் கொள்ளாதீர்கள். இறுதி ஆட்டம் மட்டும் அல்ல, இந்தத் தொடர் முழுவதுமே அவர்கள் விளையாடிய விதத்தை பார்க்கும் போது வெற்றிக்கு தகுதியானவர்களே- என்றார்.

# சென்.ஜோசப் வி.க. கிண்ணம் வென்றது

மன்னார் கால் பந்தாட்டச் சம்மேளத்தினால் நடத்தப்படும் 'மன்னாரின் முதல்வன்' வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட சுற்றுத்தொடரில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூசியா மகா வித்தியாலய அணியை எதிர்த்து பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல்பாதி ஆட்டத்தில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி சார்பில் நிறஞ்சன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்ய முதல்பாதி ஆட்ட நேர முடிவில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டமுடிவில் இரண்டு அணியினரும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்ட நிறைவுக்கு வந்தது. ஆட்டநேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் பனங்கட்டுகொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. (23)





## இலங்கை வலைப்பந்து அணி

# போராடித் தோல்வி

இங்கிலாந்தில் இடம்பெற்று வரும் உலகக் கிண்ண வலைபந்தாட்டத்தில் நேற்று இடம்பெற்ற இரண்டாம் சுற்றுக்கான முன்னோடி போட்டியில் இலங்கை - சமோவா அணிகள் மோதின. இதில் பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்ட இலங்கை அணி 55: 65 என்ற கோல்கள் கணக்கில் தோல்வியடைந்தது.

ஆரம்பத்தில் மிகத் திறமையாக விளையாடிய இலங்கை வீராங்கனைகள், அடுத்து மூன்று ஆட்ட நேரப் பகுதிகளில் தடுமாற்றத்துக்குள்ளாகி ஆட்டத்தின் பிடியைத் தளரவிட்டனர்.

முதல் கால் பாதி ஆட்டத்தில் முழுத் திறமையுடன் விளையாடிய இலங்கை அணி 17 : 13 என்ற கோல்கள் கணக்கில் தனதாக்கிக் கொண்டது.

இரண்டாம் கால் பாதி ஆட்டத்தில் 10 : 19 என்ற கோல்கள் கணக்கில் சமோவா அணி முன்னிலை பெற்றது.

இடைவேளையின் பின்னர் இலங்கை அணியினர் தவறுகளைத் திருத்திக் கொண்டு விளையாடுவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் விவேகமற்ற வேகத்துடன் விளையாடியதால் சமோவாவின் கை மேலோங்க மூன்றாவது கால் மணி ஆட்ட நேரப் பகுதியையும் சமோவா அணி 17 : 13 என தனதாக்கிக்கொண்டது.

இறுதி கால் மணி நேர ஆட்டப் பகுதியில் இரண்டு அணிகளுக்கும் கடும் போட்டி நிலவியது. இதில் சமோவா அணி 16:15 என்று தனதாக்க இறுதியில் அந்த அணி 65:55 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பில் இந்தப் போட்டியில் தர்ஜினி சிவலிங்கம் 58 முயற்சிகளில் 52 கோல்களைப் போட்டார். துலாஞ்சலி வன்னிதிலக்க 3 முயற்சிகளில் 3 கோல்களைப் போட்டார். இந்தப் போட்டியுடன் தர்ஜினி சிவலிங்கம் ஐந்து போட்டிகளில் பங்குபற்றி 243 கோல்களைப் போட்டுள்ளார்.

# ஐ.சி.சியின் விதிமுறையை கிண்டல் செய்த அமிதாப்பச்சன்

உலகக் கிண்ணத் தொடரில் ஐ.சி.சியின் பவுண்டரி விதிமுறையை நடிகர் அமிதாப்பச்சன் வேறு விதமாக விமர்சித்தார்.

உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி ஆட்டம் சமநிலையில் முடிந்தது. அதன் பிறகு கடைப்பிடிக்கப்பட்ட சுப்பர் பந்துப்பரிமாற்றமும் சமநிலையானதால் அதிக பவுண்டரி அடித்த இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஐ.சி.சி. இந்த விதிமுறை கேலிக்கூத்தானது, அதை தூக்கி எறிய வேண்டும் என்று பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து நடிகர் அமிதாபச்சன் தெரிவிக்கையில்;

'உன்னிடம் ரூ.2 ஆயிரம் ஒரே நோட்டாக இருக்கிறது. என்னிடம் ரூ.2 ஆயிரம் நான்கு 500 ரூபாய் நோட்டுகளாக இருக்கிறது. நம்மில் யார் பணக்காரர் என்று கேட்க அதற்கு நான்கு 500 ரூபாய் நோட்டு வைத்துள்ளவரே பணக்காரர்' என்று ஐ.சி.சி. சொல்வது போல் தனது ருவிற்றர் பக்கத்தில் கிண்டல் செய்துள்ளார்.

# 4 ஓட்டங்களை நீக்கவும் என நடுவர்களிடம் கேட்டுக்கொண்ட பென்ஸ்டோக்ஸ்

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பல்வேறு சர்ச்சைகளில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது. இதில் பிரதான சர்ச்சையான இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் கப்தில் எறிந்த த்ரோ பென்ஸ்டோக்ஸின் துடுப்பு மட்டையில் பட்டு பவுண்டரிக்கு சென்றது. அத்தோடு அதில் இரண்டு ஓட்டங்களும் ஓடப்பட்டிருந்தது. மொத்தமாக இங்கிலாந்து அணிக்கு 6 ஓட்டங்கள் வழங்கப்பட்டன. இது இங்கிலாந்தின் வெற்றியைத் தீர்மானிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது.

இது பெரிய சர்ச்சையாக கிளம்பியது. 6 ஓட்டங்கள் கொடுத்திருக்கக் கூடாது 5ஓட்டங்கள்தான் கொடுத்திருக்க வேண்டும் என்று விமர்சனம் எழுந்தது.

பென் ஸ்டோக்ஸும் இதற்காக தான் வருந்துவதாகவும் நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சனிடம் வாழ்நாள் முழுவதும் மன்னிப்புக் கேட்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் நடுவர்களிடம் அந்த 4 ஓட்டங்களை எண்ணிக்கையில் சேர்க்க வேண்டாம், அதை நீக்கி விடவும் என்று பென்ஸ்டோக்ஸ் கேட்டுக் கொண்டதாக இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் தெரிவித்தார். ஆனால் விதிகளின் படி அவ்வாறு செய்ய முடியாது, நடந்தது நடந்ததுதான் என்று நடுவர் கூறிவிட்டார்.

# யாழ். மாவட்ட இளைஞர் கால்பந்தாட்ட அணி காலிறுதியுடன் தொடரிலிருந்து வெளியேறியது

யாழ்ப்பாணம், ஜூலை 18

31ஆவது இளைஞர் தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கால்பந்தாட்ட அணி காலிறுதியாட்டத்துடன் தொடரில் இருந்து வெளியேறியது.

பதுளை வின்சன் டயஸ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கால்பந்தாட்ட அணியை எதிர்த்து காலி மாவட்ட இளைஞர் கால்பந்தாட்ட அணி மோதியது. இதில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சம நிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் காலி மாவட்ட அணி 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# டோனி ஓய்வு பெறாவிட்டால் அணியிலிருந்து நீக்கப்படுவார்?



இந்திய அணித் தலைவர் டோனி இந்தியாவுக்கு இரண்டு உலகக் கிண்ணங்களை வென்று பெருமை சேர்த்தவர். அவர் தற்போது ஒருநாள் போட்டி மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடி வருகிறார்.

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி அரையிறுதியோடு தோல்வியடைந்து வெளியேறியது. இதனால் இந்த உலகக் கிண்ணப் போட்டியோடு அவர் ஓய்வு பெறுவார் என்று அனைவராலும் எதிர் பார்க்கப்பட்டது. அவரது ஆட்டம் குறித்து கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டது.

இத்தற்கிடையே டோனி ஓய்வு பெறாவிட்டால் அவரை அணியில் சேர்க்காமல் புறக்கணிப்பது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதாவது டோனி ஓய்வு முடிவை அறிவிக்காவிட்டால் அவரை இந்திய அணியில் இருந்து நீக்க முடிவு செய்து இருப்பதாக பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன.

இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் அவரை ஓரங்கட்டுவது தான் சரியாக இருக்கும் கருதப்படுகிறது. 6ஆவது மற்றும் 7ஆவது வரிசையில் விளையாடும் அவர் பந்துகளை அடிப்பதில் திணறி வருவதால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்த முடிவை மேற்கொண்டு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நெருக்கடி காரணமாக டோனி தனது ஓய்வு முடிவை அறிவிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வாடகைக்கு
நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு Kitchen, Microwave, AC,Fridge, Washing Machine வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
071 513 0100

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2019 பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்குமான
**மாபெரும் விசேட செயலமர்வு**
**காலம் : ஜுலை 19 , 20, 21**
**ICT, விவசாய விஞ்ஞானம்**
**புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி**
மாதிரி வினாத்தாள்களும், கையேடுகளும் வழங்கப்படும்.
Wisdom Technical College முற்பதிவுகளுக்கு:- 077 248 7774

**Techno World**
**தொழில்நுட்பக் கல்லூரி**
(வெலிங்டன் சந்தி - லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்)
**A/L 2019**
**தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான**
**விசேட செயலமர்வு**
ICT :- உமாகாந்தன், லவன்
விவசாயம் :- ஜெயந்தன், சாரங்கன், நிரோஜன்
புவியியல் :- S.P. கரன்
சித்திரம் :- ஜெயந்தன்
**ஆரம்பம்:- 19, 20, 21 திகதிகளில்**
**8.30 மணி முதல் 02.00 மணி வரை**
**அனைத்து பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம்**
தொடர்புகளுக்கு:- 077 170 3549, 077 017 5346




*12ஆவது உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதையடுத்து நேற்றுமுன்தினம் இங்கிலாந்து அணி வீரர்கள் அந்த நாட்டு தலைமை அமைச்சர் தெரசா மேயை சந்தித்து வெற்றியைக் கொண்டாடினர்.*

# இன்சமாம் உல் ஹக் பதவி விலகினார்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் இன்சமாம் உல் ஹக் கடந்த 2016ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தேர்வுக்குழு தலைவராக பதவியேற்றார். 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்ட பின், அவர் போட்டி தொடங்குவதற்கு முன் அணியில் சில மாற்றங்களை செய்தார். இதனால் அவர் மீது கடும் விமர்சனம் எழும்பியது. நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. அந்த அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது வெளியேறியது.

இதனால் தேர்வுக்குழு தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

அவரின் பதவிக்காலம் வரும் 31ஆம் திகதி வரை இருக்கிறது. இந்த நிலையில் நேற்று அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் இதுகுறித்து தெரிவிக்கையில்;

கிரிக்கெட் என்னுடைய பேரார்வம். ஆனால், தேர்வுக்குழு தொடர்பான பணியில் ஒரு அங்கமாக இருக்க விரும்பவில்லை. துரதிர்ஷ்டவசமாக ஆரம்பப் போட்டியில் நாங்கள் தோல்வியடைந்து விட்டோம். அது இறுதிக் கட்ட போட்டிகளின்போது ஓட்ட சராசரியை சீராக கொண்டு வர தடையாக அமைந்து விட்டது-என்றார்.

இவர் தெரிவு செய்த அணிதான் 2017ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# டோனியின் சகாப்தம் முடிவுக்கு வருகிறதா?

*நாளை மதியம் உயர்மட்ட கலந்துரையாடல்*

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி அரையிறுதியோடு வெளியேறியது. இது அந்த அணியின் மீதும் நிர்வாகத்தின் மீதும் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தோல்வியின் பின்னர் மூத்த வீரர் டோனி ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது: ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. டோனி ஓய்வை அறிவிக்காதவிடத்து அவர் கட்டாயமாக அணியில் இருந்து




நீக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் செய்திகள் வெளி வந்தன. இந்த நிலையில் இந்திய அணி மேற்கிந்தியத்தீவுக்கு சென்று 3 ஒருநாள் போட்டிகள், மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் டோனி அணியில் இடம்பெற மாட்டார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அத்தோடு கோக்லி ஒருநாள், மற்றும் ரி-20 போட்டிகளின் தலைவர் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டு அந்த இடத்துக்கு ரோகித் சர்மா நியமிக்கப்படுவார் என்றும் கூறப்படுகின்றது. நாளை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மேற்கிந்தியத்தீவுக்கு செல்வதற்கான இந்திய அணி சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளது. இதில் கோக்லி அணித் தலைவர் பொறுப்பில் இருந்தால் டோனி அணியில் இடம்பெற வாய்ப்பு உள்ளது. ரோகித் சர்மாவிடம் அணித் தலைவர் பொறுப்பு கொடுக்கப்பட்டால் டோனி அணியில் இடம்பெற வாய்ப்பு இல்லை என்பது தெளிவு.

**மரண அறிவித்தல்**

**செல்லத்தம்பி சரவணமுத்து**



தோற்றம் 16.10.1938 மறைவு 16.07.2019

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி சரவணமுத்து (அருச்சுனன்) 16.07.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் பூமணி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற தெய்வானை மற்றும் சோதியம்மா ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், தர்மலிங்கம், இராசமணி, தேசிங்குராசா மற்றும் பவளம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கலையரசி மற்றும் சாந்தி (கனடா), ஜேந்தி (ஜேர்மனி), சந்திரா (ஜேர்மனி), வசந்தி(பிரான்ஸ்), காலஞ்சென்ற ஸ்ரீ கிருஷ்ணகுமார்(கோபி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று காலை 9.00 மணிக்கு பூதவுடல் சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**50/32, செட்டித்தெரு, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

021 222 9091/ 077 869 5971




லண்டனில் இடம்பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ருமேனியா நாட்டு வீராங்கனை சிமோனா ஹெலப் வெற்றி பெற்று முதன்முறையாக கிண்ணம் வென்றார். அவர் நாட்டுக்குச் சென்ற போது மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.